# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 168 வைகாசி 27

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, செவ்வாய், ஜூன் 10, 2025 ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




## கடல் வழியாக கப்பலில் காசாவுக்குள் நுழைய முயன்ற கிரெட்டா தன்பெர்க் கைது

...2-ம் பக்கம்

## நான் மிகவும் அதிர்ஷ்டசாலி: இந்திய விண்வெளி வீரர் சுபன்ஷூ சுக்லா நெகிழ்ச்சி

...3-ம் பக்கம்

## சென்னை, பெங்களூருவில் நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டிகள் மாற்றம்: பி.சி.சி.ஐ.

...6-ம் பக்கம்



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், முதன்மைச்செயலாளர்கள் த.உதயச்சந்திரன், சத்யபிரதா சாகு, பதிவாளர் க.நந்தகுமார், இயக்குநர்கள் பா.முருகேஷ், த.மோகன், கூடுதல் பதிவாளர் எஸ்.பி.அம்ரித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரசு திட்டங்களின் தற்போதைய நிலை, செயல்பாடுகள் குறித்து

# 4 துறைகளின் அமைச்சர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

### முக்கிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 10-

**சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் 4 துறைகளின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது முக்கிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு அவர் அறிவுறுத்தினார்.**

**அமைச்சர்கள் பங்கேற்பு**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று காலை 11 மணிக்கு பல்வேறு துறைகள் சார்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. நெடுஞ்சாலை சிறு துறைமுகங்கள் துறை, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, உணவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. துறை அமைச்சர்கள் எ.வ.வேலு, மூர்த்தி, சக்கரபாணி, கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் அந்தந்த துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**முதல்வர் அறிவுறுத்தல்**

இந்த ஆலோசனை கூட்டத்தில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றது. குறிப்பாக தமிழக அரசு செயல்படுத்தி வரும் முக்கிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துவது பற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

### ராஜ்யசபா தேர்தலுக்கான மனு தாக்கல் நிறைவு:

# தி.மு.க., அ.தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வாகின்றனர்

சென்னை, ஜூன் 10-

**ராஜ்யசபா தேர்தலுக்கான மனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், தி.மு.க., அ.தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வாகுகிறார்கள். இன்று வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடக்கிறது. 12-ம் தேதி வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாளாகும். அன்று மாலையே வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியாகிறது.**

தமிழகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களாக இருக்கும் 18 பேரில் தி.மு.க.வை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, ம.தி.மு.க.வை சேர்ந்த வைகோ, அ.தி.மு.க.வை சேர்ந்த சந்திரசேகரன், பா.ம.க.வை சேர்ந்த டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஜூலை 24-ம் தேதியுடன் முடிவடைகிறது.

அதனைத் தொடர்ந்து, புதிதாக 6 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக வரும் 19-ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 2-ம் தேதி தொடங்கியது. தி.மு.க. சார்பில் மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன், வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் கடந்த 6-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அதேபோல், அ.தி.மு.க. தரப்பில் ஐ.எஸ். இன்பதுரை, தனபால் ஆகியோர் மனுதாக்கல் செய்தனர். மேலும், சுயேச்சைகள் 7 பேரும் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில், நேற்று மதியம் 3 மணியுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்தது. மொத்தம் 13 பேர் களத்தில் உள்ளனர். இன்று வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடக்கிறது. 12-ம் தேதி வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாளாகும். அன்று மாலையே வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியாகும்.

சுயேச்சையாக மனு செய்துள்ள 7 பேரின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்படும் என தெரிகிறது.

அதன்பிறகு, தேர்தல் களத்தில் 6 பேர் மட்டுமே நீடிக்க வாய்ப்பு இருப்பதால், தி.மு.க. வேட்பாளர்கள் 4 பேரும், அ.தி.மு.க. வேட்பாளர்கள் 2 பேரும் போட்டியின்றி தேர்வாக வாய்ப்பு இருக்கிறது.

### 98.5 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம்:

# அமித்ஷாவுக்கு ஆ.ராசா பதிலடி

சென்னை, ஜூன் 10-

**98.5 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம் ஆ.ராசா தெரிவித்துள்ளார்.**



தி.மு.க. எம்.பி ஆ.ராசா நேற்று சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: - டெல்லி, மராட்டியம், அரியானா போல தமிழ்நாடு கிடையாது. தமிழ்நாடு திராவிட சித்தாந்த பின்னணி கொண்ட மாநிலம். இங்கு பா.ஜ.க.வால் ஒன்றும் செய்ய முடியாது. தமிழ்நாடு அமைதி பூங்காவாக உள்ளதை அமித்ஷா விரும்பவில்லை. சட்டம் , ஒழுங்கு தமிழகத்தில் அமைதியாக உள்ளது. மத்திய அரசு நிதி ஒதுக்காதபோது, மாநில அரசு நிதியில் வளர்ச்சி திட்டங்களை மேற்கொண்டு வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

மதுரையில் நடந்த கூட்டத்தில் தனது பதவிக்கு உகந்தவாறு மத்திய அமைச்சர் அமித்ஷா பேசவில்லை. கூட்டாட்சி தத்துவத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் மத்திய உள்துறை அமைச்சர் பேசியுள்ளார். 98.5 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம். அமித்ஷாவை நான் அழைக்கிறேன். விவாதத்திற்கு நான் தயார்? அமித்ஷா தயாரா? தமிழ்நாடு அமைதி பூங்காவாக உள்ளதை அமித்ஷா விரும்பவில்லை.

தமிழ்நாட்டில் மதவாத சக்திகள் நுழைய முடியாது. எப்படிப்பட்ட கூட்டணி அமைத்தாலும் அதனை தி.மு.க. கூட்டணி வெல்லும். பா.ஜ.க.வின் எந்தவித மத அரசியலும் பிளவுவாத அரசியலும் தமிழ்நாட்டில் எடுபடவில்லை. தி.மு.க.விற்கு அச்சப்பட்டு தான், தமிழ்நாட்டுக்கு வந்து அமித்ஷா பேசியுள்ளார். தி.மு.க.வை கண்டு பா.ஜ.க.தான் அஞ்சுகிறது" என்றார்.

# தமிழ்நாடு மாநில திட்டக்குழு தயாரித்த 4 அறிக்கைகள் முதல்வரிடம் சமர்ப்பிப்பு

சென்னை, ஜூன் 10-

**தமிழக மாநிலத் திட்டக் குழு தயாரித்த 4 அறிக்கைகள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட, தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 - தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம் உள்ளிட்ட 4 அறிக்கைகள் முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று (ஜூன் 9) தலைமைச் செயலகத்தில், துணை முதல்வர் மற்றும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் வேளாண்மை சாராத வேலை வாய்ப்புகள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 - தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம், தமிழ்நாட்டில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம், அறிவு சார் பொருளாதாரத்தை நோக்கி - தமிழ்நாட்டை வடிவமைக்கும் பாதை ஆகிய நான்கு அறிக்கைகளை சமர்ப்பித்தார்.

**அந்த அறிக்கைகளின் முக்கிய அம்சங்கள்:**

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள்: தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வேளாண் சாரா பணிகளில் தன்மை மற்றும் அளவினை அறிந்து கொள்ளும் முக்கிய நோக்கத்துடன் வேளாண் சாரா வேலை வாய்ப்பு குறித்த ஆய்வு மாநிலத் திட்டக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு தமிழ்நாட்டின் அதிக வேளாண் சாராத பணிகளைக் கொண்டுள்ள மாவட்டங்கள் மற்றும் குறைந்த அளவு வேளாண் சாராத பணிகளைக் கொண்டுள்ள ஆறு மாவட்டங்களிலுள்ள 12 தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில், வேளாண் பணிகளிலிருந்து, அதிகளவில் வேறு துறைகளுக்கு மாறும் நிலை காணப்படுகிறது. கட்டடம் மற்றும் உற்பத்தி துறைகள் போன்ற வேளாண்மை சாராத துறைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது 75%-க்கும் அதிகமான ஆண் தொழிலாளர்கள் மற்றும் 50%-க்கும் அதிகமான பெண் தொழிலாளர்கள் வேளாண்மை அல்லாத துறைகளில் வேலை செய்யும் நிலை உள்ளது என்பதை இந்த ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. இது 2012-க்குப் பிறகு வேளாண்மைத் துறையின் சதவீதத்தில், 20% குறைந்துள்ளது என்பதையும் குறிக்கிறது.

இது ஊரக வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றத்தைக் காட்டுகிறது. இந்த ஆய்வின்படி, 15 முதல் 34 வயதுக்குட்பட்ட இளம் தொழிலாளர்களே இந்த மாற்றத்தின் முக்கிய காரணியாக இருந்து வருகிறார்கள் எனத் தெரியவருகிறது. அதிக ஊதியமும் நிலையான வேலை வாய்ப்புகளும் இளைஞர்களை வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகளுக்கு ஈர்த்துள்ளன. கட்டடத் தொழில் இளைஞர்களிடையே, முதன்மையான துறையாகவும், பெண்களிடையே உற்பத்தித் துறை முக்கிய வேலை வாய்ப்பு துறையாகவும் உருவெடுத்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030- "நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம்" - இது தமிழக அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் சார்பில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, 2030-ம் ஆண்டுக்கான வளர்ச்சி திட்டமான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் உள்ள 17 இலக்குகள் வாரியாக அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

மேலும், இந்த ஆவணம் பல்வேறு இலக்குகளில் மாநிலத்தின் தற்போதைய நிலை மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள், சிறப்பு முயற்சிகள் மற்றும் கொள்கை உருவாக்கங்கள் மூலம் தமிழக அரசின் முன்னெடுப்புகளை எடுத்துக் காட்டுகிறது. இந்த ஆவணம், ஒவ்வொரு இலக்கினை அடைவதற்கான உத்திகள்

**(கடைசி பக்கம் பார்க்க)**




**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 256.22 | 100.15 |
| பாயிண்ட் 82,445.21 | பாயிண்ட் 25,103.20 |



**தங்கம்**
1 சவரன் ₹71,640
1 கிராம் ₹8,955



**வெள்ளி**
1 கிலோ ₹118,000
1 கிராம் ₹118.00

**டாலர்** ₹85.69

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# காசாவுக்குள் நுழைய முயன்ற கிரெட்டா தன்பெர்க் கைது

**ஜெருசலேம், ஜூன் 10-**

கடல் வழியாக கப்பலில் காசாவுக்குள் நுழைய முயன்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க் கைது செய்யப்பட்டார்.



இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஓராண்டுக்குமேல் போர் நீடித்து வருகிறது. இந்த போரில் காசாவில் 54 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் காசாவுக்கு இஸ்ரேல் வழியாக நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, சுவீடனை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க். இவர் பிரீடம் புளோட்டிலா மேட்லீன் என்ற பாலஸ்தீன ஆதரவு தொண்டு நிறுவனத்துடன் கைகோர்த்து காசாவுக்கு கப்பலில் நிவாரண பொருட்களை கொண்டு செல்வதாக அறிவித்தார். அதன்படி, அந்த கப்பலில் கிரெட்டா தன்பெர்க், பிரான்ஸ் எம்.பி. ரிமா ஹசன் உள்பட 12 பேர் பயணித்தனர்.

இத்தாலியின் சிஸ்லி தீவில் இருந்து காசா நோக்கி புறப்பட்ட அந்த கப்பல் இன்று அதிகாலை இஸ்ரேல் கடற்பகுதி அருகே சென்ற போது இஸ்ரேல் அதிரடிப்படையினர் அதை இடைமறித்தனர். கப்பலுக்குள் நுழைந்த இஸ்ரேல் படையினர் அதில் இருந்த கிரெட்டா தன்பெர்க் உள்பட 12 பேரையும் கைது செய்தனர். விளம்பரத்திற்காக கிரெட்டா தன்பெர்க் உள்பட 12 பேரும் இந்த செயலில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டியை இஸ்ரேல் வெளியுறவுத்துறை, கைது செய்யப்பட்ட 12 பேரும் இஸ்ரேல் அழைத்து செல்லப்பட்டு அங்கிருந்து அவரவர் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவித்துள்ளது.

# இந்தியாவுக்கு போட்டியாக பாக்., எம்.பி.க்கள் இங்கி. பயணம்

**லண்டன், ஜூன் 10-**

இந்தியாவுகு போட்டியாக பாகிஸ்தான் எம்.பி.க்கள் இங்கிலாந்துக்கு பயணம் செய்தனர்.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக மே 7ம் தேதி பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் அழித்தது.

இதையடுத்து, இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்தது. 3 நாட்கள் நடந்த மோதல் இரு தரப்பு ராணுவ மட்டத்திலான பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வந்தது. அதேவேளை, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து எடுத்துரைக்கவும், பயங்கரவாதத்திற்கு எதிரான பல்வேறு நாடுகளை ஒன்றிணைக்கவும் அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. இந்த குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்தனர்.

இந்நிலையில், இந்தியாவுக்கு போட்டியாக பாகிஸ்தானும் எம்.பி.க்கள் அடங்கிய தூதுக்குழுவை நியமித்துள்ளது. இந்த குழுவை அந்நாட்டு முன்னாள் வெளியுறவுத்துறை மந்திரி பிலாவல் புட்டோ சர்தாரி தலைமை ஏற்று நடத்துகிறார். 9 பேர் அடங்கிய இந்தக்குழு அமெரிக்கா சென்றது. அங்கு ஐ.நா. பிரதிநிதிகளுடனும், அமெரிக்க அதிகாரிகளுடனும் இந்தக்குழு ஆலோசனை நடத்தியது. இதில், இந்தியாவுடனான மோதலில் பாகிஸ்தானின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அந்தக்குழு நேற்று இங்கிலாந்து சென்றது. இங்கிலாந்து அரசின் முக்கிய அதிகாரிகளை சந்திக்கும் இந்தக்குழு பாகிஸ்தான் நிலைப்பாட்டை கூறுகிறது. அதேவேளை, சிந்து நதி ஒப்பந்தம் உள்பட இந்தியாவுடனான அனைத்து பிரச்சினைகள் குறித்தும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகான தயாராக இருப்பதாக பாகிஸ்தான் குழு கூறியுள்ளது.




தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச்செயலகத்தில், என்.டி.டி.வி முதன்மைச் செயல் அலுவலர் ராகுல் கன்வால் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் முருகானந்தம், என்.டி.டி.வி தில்லி அரசியல் தலைவர் வசுதா, தலைவர் (தெற்கு) வீராகவன், சாம் டேனியல் ஆகியோர் உடனிருந்தனர்.

## முருகப்பெருமானை போன்று,

# தி.மு.க.வை வதம் செய்து 2026-ல் ஆட்சியைப் பிடிப்பார் எடப்பாடியார்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி

**மதுரை, ஜூன் 10-**



முருகப்பெருமானை போன்று திமுகவை வதம் செய்து 2026-ல் ஆட்சியைப் பிடிப்பார் எடப்பாடியார் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

தமிழ் கடவுள் முருகப்பெருமானின் ஆலயங்களில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு அதி காலை முதலாகவே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பால்குடம் எடுத்தும் காவடிகள் எடுத்தும் சுவாமி தரிசனம் செய்து வரக்கூடிய வேளையில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் நோக்கி அதிகாலை முதலாகவே பக்தர்கள் பால் குடம் எடுத்து வந்தனர்.

மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பைக்காரா பகுதியில், மாமன்ற உறுப்பினர் பைக்காரா கருப்புசாமி ஏற்பாட்டில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு திருப்பரங்குன்றம் நோக்கி பால்குடம் எடுத்து வரும் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் நீர்மோர் வழங்கும் விழாவில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.,தனது துணைவி ஜெயந்திரா ஜூவோடு கலந்து கொண்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார். பால்குடம் எடுத்துச் செல்லக்கூடிய பக்தர்களை முருகா வாங்க வாங்க என்று அழைத்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது- இந்த பகுதியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர் கருப்பசாமி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருப்பரங்குன்றம் நோக்கி செல்லக்கூடிய பக்தர்களுக்கு நீர்,மோர்,அன்னதானம் உள்ளிட்டவைகளை வழங்கி வருகிறார்.அந்த வகையில் இன்றைய வைகாசி விசாக நிகழ்வில் பக்தர்களுக்கு அன்னதானம் நீர்.மோர் உள்ளிட்டவைகளை வழங்குவதில் அதிமுக பெருமிதம் கொள்கிறது.

மதுரைக்கு வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறித்த கேள்விக்கு? எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு தேர்தலில் அறுபடை வீடுகளில் குடி கொண்டிருக்க கூடிய முருகப்பெருமானை போன்று ,இபிஎஸ் திமுகவை வதம் செய்து 2026 -ல் ஆட்சியைப் பிடிப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

## அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. மரணம்:

# எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**திருப்பூர், ஜூன் 10-**

திருப்பூர் தெற்கு தொகுதியின் முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சு. குணசேகரன் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று காலை உயிரிழந்தார்.அவரது மறைவிற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் தெற்கு தொகுதியில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.வாக பதவி வகித்தவர் குணசேகரன் (58). இவர் அ.தி.மு.க.வின் மாநில அம்மா பேரவை இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தார். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக உடல் நிலை சரியில்லாமல் கோவை தனியார் மருத்துவமனையில் குணசேகரன் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலன் இன்றி நேற்று காலை மருத்துவமனையில் உயிரிழந்தார். இவருக்கு ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள். கடந்த 2001 முதல் 2006 வரை திருப்பூர் நகராட்சி கவுன்சிலராக இருந்த இவர், 2011 முதல் 2016-ம் ஆண்டு வரை திருப்பூர் மாநகராட்சி துணை மேயராக பதவி வகித்தார்.

2016 முதல் 2021 வரை திருப்பூர் தெற்கு தொகுதியில் எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வந்தார். தொடர்ந்து 2-ம் முறையாக போட்டியிட்டு, வெறும் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் திமுகவிடம் தோற்றார். தற்போது மாநில அம்மா பேரவை இணைச் செயலாளராக பதவி வகிக்கிறார். அவரது மறைவிற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

# கேரளா: சரக்கு கப்பலில் தீ விபத்து-18 பேர் மீட்பு

**திருவனந்தபுரம், ஜூன் 10-**

கேரளா அருகே உள்ள துறைமுகத்தில் சரக்கு கப்பலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. 18 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்

சிங்கப்பூரை சேர்ந்த சரக்கு கப்பல் 'எம்.வி. வான் ஹய் 503', கடந்த 7-ந்தேதி இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கிளம்பியது. சுமார் 270 மீட்டர் நீளம் கொண்ட இந்த கப்பல் வரும் 10-ந்தேதி மும்பை துறைமுகத்தை சென்றடைய இருந்தது. இந்நிலையில், இந்த கப்பல் கேரள மாநிலத்தின் கண்ணூர் துறைமுகம் அருகே வந்தபோது, கப்பலில் எதிர்பாராத விதமாக பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து காலை 10.30 மணியளவில் கடலோர காவல் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சுமார் 11 மணியளவில் இந்திய கடற்படைக்கு சொந்தமான 'ஐ.என்.எஸ். சூரத்' கப்பல் மீட்பு பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டது. கப்பலில் மொத்தம் 22 பேர் இருந்த நிலையில், 18 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். மீதம் உள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

# விமானத்தில் ஏறும்போது தடுமாறிய ட்ரம்ப்: சமூகவலைதளங்களில் வீடியோ வைரல்


**வாஷிங்டன், ஜூன் 10-**

அமெரிக்க அதிபர் விமானத்தில் ஏறும்போது தடுமாறினார். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப். இவர் நேற்று நியூஜெர்சி மாகாணம் மோரிஸ்டவுண் விமான நிலையத்தில் இருந்து மேரிலண்ட் மாகாணத்திற்கு ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் புறப்பட்டார். விமானத்தில் ஏறுவதற்காக படிக்கட்டில் அதிபர் டொனால்ட் டிரம்ப் ஏறிக்கொண்டிருந்தபோது திடீரென அவர் நிலைதடுமாறினார்.

படிக்கட்டில் கீழே விழுவதுபோல் கால் தடுமாறிய டிரம்ப் உடனடியாக சுதாரித்துக்கொண்டார். பின்னர், அவர் பட்டிக்கட்டில் ஏறி விமானத்திற்குள் நுழைந்தார். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் விமானத்தில் ஏறும்போது அடிக்கடி நிலைதடுமாறி கீழே விழுந்த சம்பவங்கள் அரங்கேறி சமூகவலைதளத்தில் வைரலானது என்பது குறிப்பிடத்தக்கது.

**10-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வம்படியாக புதிய பொறுப்புகளை ஏற்க நேரும். இன்று, வேலைகளைப் பொறுத்தவரை எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

**ரிஷபம்:-** மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பணவரவால் சந்தோஷம் நிலவும்.

**மிதுனம்:-** புதிய விரிவாக்க முயற்சிகளால் வியாபாரம் களைகட்டும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம், வங்கிக் கடன் உதவியால் நிறைவேறும்.

**கடகம்:-** பலவழிகளிலும் வருமானம் ஓரளவு எதிர்பார்த்த அளவுக்கு இருக்கும். குடும்பத்தில் பிள்ளைகளை அனுசரித்து செல்லாவிட்டால், அல்லல்பட நேரலாம். எச்சரிக்கை உணர்வோடு வாகனப் பயணங்களை மேற்கொள்வது நல்லது.

**சிம்மம்:-** அனுசரணையோடு, குடும்பத்தோடு குதுகலமாக பொழுதைக் கழித்து கவலைகள் மறையும். ஒரு நாள் கழிவது ஒரு யுகம் கழிவது போன்றிருக்கும். நீர்நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

**கன்னி:-** இன்று, பெரியவர்கள் ஆசிகள் பூரணமாகக் கிடைத்து வாழ்வில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பொழுதுபோக்கு அம்சங்கள் மனதை செலுத்துவது நல்லது. உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பால் ஆதாயம் அடைவீர்கள்.

**துலாம்:-** இன்று, வருமானம் சுமாரான அளவுக்கு இருக்கும். குடும்பத்தில் உள்ளவரை அனுசரித்துச் செல்லாவிட்டால், அல்லல்பட நேரலாம். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது.

**விருச்சிகம்:-** திருமணத்திற்கு நீண்ட நாளாக காத்திருந்தவர்கள் வீட்டில், மேளச்சத்தம் கேட்கும். தொழில் துறையினருக்கு பெரிய அளவில் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். பணியில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை ஓரளவு குறையும்.

**தனுசு:-** இன்று, அதிகாரிகள் மனம் திருப்தி அடையும் வகையில், கடமை உணர்வுடன் செயல் பட்டு அவர்களின் மனம் கவர்வீர்கள். பெண்களால் வீண் செலவுகள் ஏற்படும். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம்.

**மகரம்:-** இன்று தனவரவு சிறப்பாக இருக்கும். புதிய சொத்து சேர்க்கைகள் ஏற்படும். மனைவியுடன் கழிக்கும் காலங்கள் மகிழ்ச்சி மிக்கதாக அமையும். கலைஞர்களின் வருமான அளவு உயரும்.

**கும்பம்:-** இன்றைய நாள் காரியம் வெற்றியோடு, களிப்பும் அதிகரிக்கும் . அரசு ஆதரவு இருக்கும் அனுகூலமான நாள். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை, தைரியம் கூடும் அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**மீனம்:-** இன்று ஆன்மீக சிந்தனைகள் அதிகரித்து மனதில் அமைதிக்கு வழிவகுக்கும். சிலர் மடியில் மழலை தவழ கூடிய மகிழ்ச்சி மிக்க காலம் கனியும். தீர்த்த யாத்திரைகள், உல்லாசப் பயணங்கள் மூலம் சந்தோஷம் நிலவும்.

# அரசு இல்லத்தின் 8-ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல்: காவலாளி கைது

**தாம்பரம், ஜூன் 10-**

தாம்பரம் அரசு சேவை இல்லத்தில் தங்கிப் படித்த மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்த அரசு சேவை மைய காவலாளியை போலீஸார் கைது செய்தனர்.

தாம்பரம் சானிடோரியம் பகுதியில் தமிழக அரசின் சமூக நலத்துறை சார்பாக அரசு சேவை இல்லம் செயல் பட்டு வருகிறது. இந்நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி கடந்த 4 நாட்களுக்கு முன்பு அரசு சேவை இல்லத்தில் சேர்ந்து குரோம்பேட்டையில் உள்ள அரசு மகளிர் பள்ளியில் எட்டாம் வகுப்பு சேர்ந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை சேவை இல்லத்தில் இருந்து எழுந்து வரும்போது மர்ம நபர் மாணவி முகத்தில் கைவைத்து அழுத்தி மயக்கம் அடைய செய்து பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதில் முகம் மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டதோடு கால் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. அந்த மாணவி வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டதால் அங்கிருந்து மர்ம நபர் தப்பிச் சென்றுள்ளார். அப்போது, அருகில் இருந்த மாணவிகள் மற்றும் பாதுகாவலர்கள் அவரை மீட்டு தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மேல் சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு எட்டாம் வகுப்பு மாணவி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அரசு சேவை இல்லத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. சேவை இல்லத்தில் புகுந்து மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட நபர் யார் என்பது குறித்து சிட்லபாக்கம் போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் சிட்லபாக்கம் பகுதியை சேர்ந்த அரசு சேவை மைய காவலாளி மேத்யூ (49) என்பவர் தான் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் என்பது தெரியவந்தது. தொடர்ந்து போலீஸார் அவரை கைது செய்தனர்.

# மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து நிலநடுக்கம்

**நைபியிடவ், ஜூன் 10-**

மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் அப்பகுதி பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மியான்மரில் நேற்று காலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. காலை 8.44 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.3 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

மியான்மரில் 80 கிலோ மீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 18.80 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.86 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

முன்னதாக அதிகாலை 3.56 மணியளவில் ரிக்டரில் 3.8 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நில அதிர்வால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# வெடிகுண்டு எச்சரிக்கை: குஜராத் உயர்நீதிமன்றத்தில் பரபரப்பு

**காந்தி நகர், ஜூன் 10-**

குஜராத் உயர்நீதிமன்றத்திற்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்ததையடுத்து வளாகம் முழுவதும் சோதனை மேற்கொண்டனர்.

சமீப காலமாக வெடிகுண்டு மிரட்டல் விடுவது தொடர் கதையாகி வருகின்றது. பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், உயர்நீதிமன்றங்கள் என பல்வேறு மாநிலங்களில் இது தொடர்ந்து வருகின்றது. அந்தவகையில், குஜராத் உயர்நீதிமன்றத்திற்கு நேற்று காலை சுமார் 11.45 மணியளவில் மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில் நீதிமன்ற கட்டடத்தில் மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு வைக்கப்பட்டதாகவும், மாலை வெடிக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மண்டலம் 1-இன் பொறுப்பு துணை காவல் ஆணையர் சபின் ஹாசன் தெரிவித்தார்.

மேலும் சம்பவ இடத்துக்கு உள்ளூர் காவலர்கள் உள்பட ஆறு குழுக்கள் இணைந்து சோதனை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அகமதாபாத்தில் உள்ள சர்கேஜ்-காந்தி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வளாகத்தில், அனைத்து நீதிமன்ற கட்டடங்கள், அறைகள், நிறுத்தப்பட்டிருந்த மற்றும் உள்ளே வந்த கார்கள் உள்பட போலீஸார் முழுமையான சோதனை நடத்தினர்.

சோதனைக்குப் பிறகு வளாகத்தில் சந்தேகத்திற்கிடமான எந்த பொருளும் இல்லை என்பது கண்டுபிடிக்கப்படவில்லை என்று அவர் கூறினார். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திங்களன்று நீதிமன்றத்தின் இரண்டாவது அமர்வை ரத்து செய்ததாக துணை காவல் ஆணையர் கூறினார்.

# மும்பை புறநகர் ரயில்களில் தானியங்கி கதவுகள் அமைக்க முடிவு

**தானே, ஜூன் 10-**

ம்பை புறநகர் ரயில்களில் தானியங்கி கதவுகள் அமைக்கப்படும் என இந்திய ரயில்வே உறுதி அளித்துள்ளது.

மஹாராஷ்டிரா மாநிலம், மும்பை அடுத்த தானேவில் புறநகர் ரயிலில் இருந்து தவறி விழுந்து பயணிகள் 5 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ரயிலில் கூட்ட நெரிசல் காரணமாக நிகழ்ந்து உள்ளது. தற்போது மும்பை புறநகர் ரயில்களில் தானியங்கி கதவுகள் அமைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மும்பையில், ரயிலில் இருந்து தவறி விழுந்து பயணிகள் 5 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.,யுமான ராகுல் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: பா.ஜ., அரசு தனது 11 ஆண்டுகள் ஆட்சி நிறைவை கொண்டாடும் அதே வேளையில் மும்பையில் இருந்து வரும் துயரச் செய்திகளில் நாட்டின் யதார்த்தம் பிரதிபலிக்கிறது. பலர் ரயிலில் இருந்து விழுந்து இறந்தனர்.

இந்திய ரயில்வே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையின் முதுகெலும்பாக உள்ளது. ஆனால் இன்று அது பாதுகாப்பின்மை, நெரிசல் மற்றும் குழப்பத்தின் அடையாளமாக மாறியுள்ளது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும். இவ்வாறு ராகுல் கூறியுள்ளார்.

மஹாராஷ்டிரா முதல்வர் பட்னவிஸ் கூறியதாவது: தானேவில் ரயிலில் இருந்து மொத்தம் பயணிகள் 8 பேர் தவறி விழுந்து, அவர்களில் சிலர் உயிரிழந்த சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. அவர்களுக்கு எனது மனமார்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது குடும்பத்தினரின் துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம். இந்த சம்பவத்திற்கான சரியான காரணம் குறித்து ரயில்வே துறை விசாரணையைத் தொடங்கியுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சென்னை: விமானத்தில் கடத்தி வந்த 1.4 கிலோ தங்கம் பறிமுதல்

**சென்னை, ஜூன் 10-**

சென்னை விமான நிலையத்தில் தங்கம் கடத்தப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் துபாய் மற்றும் தாய்லாந்து நாடுகளில் இருந்து சென்னை விமான நிலையம் வந்த சந்தேகத்திற்கிடமான 2 பயணிகளை மறித்து அவர்களிடம் சோதனை செய்தனர். அப்போது அவர்கள் வைத்திருந்த பையில் அதிகாரிகள் சோதனை செய்தபோது அதில் மறைத்து வைத்து கொண்டுவரப்பட்ட ரூ.1.30 கோடி மதிப்புடைய, 1.4 கிலோ தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல செய்தனர். இதனை கடத்தி வந்த சென்னையைச் சேர்ந்த 2 பயணிகளை கைது செய்த அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### அடிப்படை வசதியில்லாத வேளாண்மை கல்லூரி:
# அ.தி.மு.க. சார்பில் போராட்டம் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 10-**

கரூர் அரசு வேளாண்மைக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தராததை கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறுமென எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;-2021 டிசம்பர் மாதம், கரூர் மாவட்டத்தில் புதிய அரசு வேளாண்மைக் கல்லூரி துவங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, அம்மா மண்டபத்தில் புதிய வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான ஆய்வகம், கழிப்பிட வசதிகள், தங்கும் வசதிகள் முதலானவை செய்து தரப்படாத காரணத்தால் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

இக்கல்லூரியில் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியர், தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி, கடந்த 7.3.2024 மற்றும் 6.5.2025 ஆகிய தேதிகளில் சாலை மறியல் போராட்டம் நடத்தியும், அரசு இவ்விஷயத்தில் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறது. இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு வேளாண்மைக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தராததை கண்டித்தும்; மாணவர்கள் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை உடனடியாக செய்து தர வலியுறுத்தியும், அ.தி.மு.க. கரூர் மாவட்டத்தின் சார்பில், 11.6.2025 – புதன் கிழமை காலை 10 மணியளவில், கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணி, தலைமையிலும்; கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான விஜயபாஸ்கர் முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு பஸ் டிரைவரை செருப்பால் அடித்த உதவி மேலாளர் சஸ்பெண்ட்

**மதுரை, ஜூன் 10-**

மதுரை ஆரப்பாளையம் அருகே அரசு பஸ் டிரைவரை செருப்பால் அடித்த சம்பவம் பெரும் பரபரப்பான நிலையில், அச்செயலை செய்த உதவி மேலாளர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

மதுரையில் இருந்து திருப்பூர் செல்லும் அரசு பஸ்ஸை டிரைவர் ஓட்டி வந்தார். நேற்று ஆரப்பாளையம் ரவுண்டானா அருகே பஸ்ஸை நிறுத்தி பயணிகளை ஏற்றி வந்தார். பின்னர், ஆரப்பாளையம் பஸ் நிறுத்தத்திற்கு சென்ற பஸ்ஸை வெகு நேரமாகியும் எடுக்காததால், டிரைவரிடம் பயணிகள் வாக்குவாதம் செய்தனர்.

அப்போது, உதவி மேலாளர் சொன்னால் தான் பஸ்ஸை எடுப்பேன் என்று டிரைவர் கூறியுள்ளார். இதனால், பயணிகள் ஆரப்பாளையம் பஸ் நிறுத்த உதவி மேலாளர் மாரிமுத்துவிடம் சென்று பஸ்ஸை எடுக்குமாறு கூறியுள்ளனர். இதனால் குழம்பிப் போன அவர், பயணிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதன்பிறகு, டிரைவரை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, தனக்கு எதிராக பயணிகளை தூண்டி விடுகிறாராயா? என்று கூறி, செருப்பால் அடித்துள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், உதவி மேலாளர் மாரிமுத்து தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# நல்லாட்சி நடத்துவதில் கவனம்: பிரதமர் நரேந்திரமோடி உறுதி

**புதுடில்லி, ஜூன் 10-**



எங்கள் கூட்டு வெற்றியை பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். 'நல்லாட்சி, மாற்றத்தில் தெளிவான கவனம் செலுத்தப்படுகிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

நல்லாட்சி, மாற்றத்தில் தெளிவான கவனம் செலுத்தப்படுகிறது. 140 கோடி இந்தியர்களின் ஆசீர்வாதம், கூட்டு பங்கேற்பால் பல்வேறு துறைகளில் விரைவான மாற்றம் ஏற்பட்டுள்ளது. வேகம், அளவு உணர்திறன் கொண்ட புதிய மாற்றங்களை தே.ஜ., கூட்டணி அரசு வழங்கி உள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் இருந்து சமூக மேம்பாடு வரை, அனைத்து வகையான முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தப்படுகிறது. இந்தியா இன்று வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாக மட்டுமல்லாமல், அனைத்து உலகளாவிய பிரச்னைகளுக்கும் குரல் கொடுக்கிறது.

எங்கள் கூட்டு வெற்றியை பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசின் ஒவ்வொரு திட்டமும் ஏழை சகோதர, சகோதரிகள் மற்றும் சாமானிய மக்களின் நலனை உறுதி செய்வதாக இருந்தது. சேவை மனப்பான்மையுடன் மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்கு நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். நகர்புற மற்றும் கிராமப்புற பெண்கள் கண்ணியத்துடனும், தன்னம்பிக்கையுடன் வாழ அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# த.வெ.க. கொள்கை பரப்பு பொது செயலாளராக அருண்ராஜ் நியமனம்

**சென்னை, ஜூன் 10-**



விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் அருண்ராஜ் இணைந்துள்ளார். அவருக்கு கொள்கை பரப்பு பொதுச் செயலளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழகம் கட்சியில் கொள்கை பரப்பு பொதுச்செயலாளராக ஓய்வு பெற்ற ஐ.ஆர்.எஸ் அதிகாரி அருண் ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஐ.ஆர்.எஸ். அதிகாரியான அருண் ராஜ், இந்திய வருமான வரித்துறையில் பணியாற்றியவர். தமிழகத்தில் பணியாற்றிய அவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பீகாருக்கு மாற்றப்பட்டார்.

மருத்துவரான இவர் யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்று ஐ.ஆர்.எஸ். அதிகாரி ஆனார். 2009 ஆம் ஆண்டு வருமான வரித்துறை அதிகாரியாக சென்னையில் பணியாற்றினார். தொடர்ந்து பீகாருக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பாட்னாவில் வருவாய்த்துறை கூடுதல் ஆணையராக பணியாற்றி வந்த அவர் அரசியலில் ஈடுபட வேண்டும் என திட்டமிட்டு இருந்தார். ஆனால் நேரடியாக அல்லாமல் ஜான் ஆரோக்கியசாமி, மூலம் விஜய்க்கு தேர்தல் வியூகங்களை வகுத்து கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே கடந்த வாரங்களுக்கு முன்பு திடீரென தனது பதவியை ராஜினாமாஅருண்ராஜ் செய்தார். இதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கும் அனுப்பியநிலையில் அந்த ராஜினாமா மத்திய அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழக வெற்றி கழகத்தில் அவர் இணைய இருப்பதாகவும் இணை பொது செயலாளர், துணை பொது செயலாளர் ஆகிய பதவிகள் வழங்கப்படலாம் என கடந்த சில தினங்களாக செய்திகள் வெளியாகின இந்த நிலையில் தான், நேற்று சென்னை பனையூரில் த.வெ.க. தலைவர் விஜய்யை சந்தித்த அருண்ராஜ், தவெகவில் இணைந்தார். அருண்ராஜ்ஜுக்கு த.வெ.க. கொள்கை பரப்பு செயலாளர் பொறுப்பு வழங்கப்படுவதாக விஜய் அறிவித்துள்ளார்.

# சிறுவாபுரியில் கவர்னர் சாமி தரிசனம்



**சென்னை, ஜூன் 10-**

சிறுவாபுரி முருகன் கோவிலில் கவர்னர் ஆர்.என்.ரவி சாமி தரிசனம் செய்தார்.

திருவள்ளூர் மாவட்டம் சிறுவாபுரி முருகன் கோவிலில் கவர்னர் ஆர்.என்.ரவி சாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் சார்பில் அவருக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. சிறுவாபுரி சாலை வயல்வெளிக்கு மத்தியில் குறுகலான சாலை என்பதால், கவர்னரின் வருகையையொட்டி, இருசக்கர வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன. 4 சக்கர வாகனங்கள் புதுவாயல், பெரியபாளையத்தை சுற்றி மாற்று வழியில் சிறுவாபுரி அனுப்பிவைக்கப்பட்டன.

இது தொடர்பாக கவர்னர் ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- "திருவள்ளூரில் உள்ள சிறுவாபுரி பாலமுருகன் கோவிலில் வைகாசி விசாகத்தில் முருகப்பெருமானை தரிசித்து பூஜித்த பாக்கியம் பெற்றேன். தமிழ்நாட்டின் எனது சகோதர சகோதரிகள், உலகம் முழுவதும் உள்ள அனைத்து பக்தர்களின் நல்வாழ்வு மற்றும் நல்ல ஆரோக்கியத்திற்காகவும், பாரதத்தின் மகிமைக்காகவும் வேண்டிக் கொண்டேன். முருகப்பெருமான் நமக்குத் தேவையான பலத்தையும் ஞானத்தையும் அளித்து, வளர்ச்சியடைந்த பாரதம் 2047 என்ற நமது தேசிய இலக்கை நிறைவேற்ற நம்மை வழிநடத்துவாராக.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நான் மிகவும் அதிர்ஷ்டசாலி:
# இந்திய விண்வெளி வீரர் நெகிழ்ச்சி

**புதுடில்லி, ஜூன் 10-**



சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு இன்று (ஜூன் 10) பயணம் செய்ய உள்ள நிலையில், ''நான் மிகவும் அதிர்ஷ்டசாலி'' என இந்திய விண்வெளி வீரர் சுபன்ஷூ சுக்லா நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

'நாசா' எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் 'இஸ்ரோ' எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் இணைந்து, 2025ல், ஆக்ஸியம் ஸ்பேஸ் ஆக்ஸ்- 4 என்ற திட்டத்தின் கீழ், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்ப உள்ளது.

இதில், இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா உட்பட அமெரிக்கா, ஹங்கேரி, போலந்து நாடுகளைச் சேர்ந்த நான்கு பேர் செல்கின்றனர். இக்குழு, அங்கு 14 நாட்கள் தங்கி ஆய்வு நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து, பால்கன் 9 ராக்கெட் வாயிலாக இன்று (ஜூன் 10) இக்குழு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு, வரும் 11ம் தேதி இரவு 10:00 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றடையக்கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது என்று, நாசா அறிவித்துள்ளது. சுபன்ஷூ சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான தனது முதல் பயணத்திற்கான இறுதிக் கட்டத்தில் தயாராகி வருகிறார். நேற்று (ஜூன் 09) சுபன்ஷூ சுக்லா குழுவினர் ஒத்திகை நடத்தினர்.

41 ஆண்டுகளுக்கு பின் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்லும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை சுபான்ஷு சுக்லா பெற உள்ளார். இதற்கு முன், 1984ல் ரஷ்யாவின் சோயுஸ் திட்டத்தின்கீழ், இந்திய விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா, விண்வெளிக்கு பயணம் செய்தார்.

இது குறித்து இந்திய விண்வெளி வீரர் சுபன்ஷூ சுக்லா கூறியதாவது: சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்வது மிகவும் அற்புதமான பயணம். நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. இவ்வாறு அவர் தெரிவித்தார்.


## Format C-2

**( For political party to publish in website, newspapers, TV )**

**Declaration about criminal antecedents of candidates set up by the party**

**( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )**

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |

| 1 | 2 | 3 | 4 | | 5 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (A) Pending criminal cases | | (B) Details about cases of conviction for criminal offences | | |
| Sl. No. | Name of constituency | Name of candidate | Name of Court, case No. & status of the case(s) | Sections of the Acts concerned & brief description of offence(s) | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
| 1 | Biennial Elections to Council of States, 2025 | Thiru. M.DHANAPAL | Not Applicable | Demonstration without getting permission from the police and disturbing the traffic. U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | | | Not Applicable | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

## Format C-7

**(for political parties to publish in the newspapers, social media platforms & website of the party)**
**Information regarding individuals with pending criminal cases, who have been selected as candidates, along with the reasons for such selection, as also as to why other individuals without criminal antecedents could not be selected as candidates.**
**(As per the Commission's directions issued in pursuance of the Order dated 13.02.2020 of the Hon'ble Supreme Court in contempt petition(C) no. 2192 of 2018 in WP(C) no. 536 of 2011)**

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |
| Name of the Candidate | : | Thiru. M. DHANAPAL |

| Sl. No. | | | | | |
|---|---|---|---|---|---|
| | Criminal antecedents | | | | |
| 1. | a. | Nature of the offences | Demonstration without getting permission from the police and disturbing the traffic.U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable |
| | b. | Case No. | Cr. No. 685 /2024 Maduranthakam, PS | Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Not Applicable |
| | c. | Name of the Court | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | d. | Whether charges have been framed or not (Yes/No) | No | No | Not Applicable |
| | e. | Date of conviction, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | f. | Details of punishment undergone, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | g. | Any other information required to be given | Not Applicable | Not Applicable | Not Applicable |
| 2. | The reasons for the selection of the candidate. Selection shall be with reference to the qualifications, achievements and merit of the candidate, and not mere "winnability" at the polls (not more than 100 words) | | The selected candidate was a former MLA., and a very dedicated and a dynamic party worker. He has a very good track record and having great respect and confidence. The cases above mentioned are politically motivated, and the same was for the purpose of public welfare. We believe that there will be no adverse outcome against the alleged candidate. | | |
| 3. | Reasons as to why other individuals without criminal antecedents could not be selected as candidates (not more than 100 words) | | The above selected Candidate is more competent person than other, He is well educated and He is a doctorate in Law and Criminology, the selected candidate is a meritorious and well known person in party as well in general public. Besides, the cases filed against him are politically motivated and false in nature. | | |

* In the case of election to Council of States or States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

## மேலூரில் ரூ.3 கோடி மதிப்பீட்டில்
# முதல்வர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கும் பணி: அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்



**மேலூர், ஜூன் 10-**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கருத்தப்புலியன்பட்டி மில்கேட்டில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டும் பணியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பூமி பூஜை செய்து வைத்து தொடங்கி வைத்தார். தொடரந்து, அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டசபை தொகுதிகளிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என 2021-2022-ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில், வடக்கு சட்டமன்ற தொகுதியில் டாக்டர். எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கம் அமைந்துள்ளதால் அதனை தவிர்த்து 9 தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் கருத்தப்புலியன்பட்டி கிராமத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கும் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டரங்கத்தை தரமான விளையாட்டு அரங்கமாக அமைத்துத் தர வேண்டும் என்று விளைாட்டுத்துறை அலுவலர்களிடமும், ஒப்பந்ததாரர்களிடமும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கபடி விளைாட்டு வீரர்களும், வாலிபால் விளையாட்டு வீரர்களும் இருந்த பகுதியாக மேலூர் சட்டமன்ற தொகுதி விளங்குகிறது.


மதுரை மாவட்டத்தில் பல்வேறு தொழில்கள் தொடங்கி அவற்றின் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பது தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கமாகும். மேலூர் மருத்துவமனையினை விரிவுப்படுத்த வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று மருத்துவமனை விரிவுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

தொடர்ந்து இன்றைய தினம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கும் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை அரசு உயர் அலுலர்களும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் அவ்வப்போது நேரில் பார்த்து பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். பொது மக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா, மேலூர் வருவாய் கோட்டாட்சியர் தெ.சங்கீதா, மேலூர் நகராட்சி தலைவர் முகமது யாசின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மண்டல முதுநிலை மேலாளர் வேல்முருகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ராஜா, மேலூர் நகராட்சி ஆணையாளர் சக்திவேல், தாசில்தார் செந்தாமரை, நகர் மன்ற துணை தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துக்குமார், மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரசாமி, ராஜசேகரன், 26, 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் கலைச்செல்வி செந்தில்குமார், வசந்தா ராஜா மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர் தியாகராஜன், தி.மு.க. நிர்வாகிகள், பொது மக்கள், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## காந்திகிராமத்தில்
# பட்டாளம்மன் மதுரைவீரன் சுவாமி கோவில் கும்பாபிஷேக விழா



**அலங்காநல்லூர், ஜூன் 10-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள காந்திகிராமம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாலவிநாயகர், பட்டாளம்மன்,மதுரைவீரன், நாகம்மாள் உள்ளிட்ட பரிவார தெய்வங்களின் ஆலய மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இரண்டு கால யாக பூஜையில் கணபதி ஹோமம், மஹா சுதர்சன ஹோமம், உள்ளிட்ட பல்வேறு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

தொடர்ந்து சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி ராமேஸ்வரம், அழகர்கோவில், உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு கொண்டுவரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வானத்தில் கருடன் வட்டமிட மேல தாளம் முழங்க புனித நிர் ஊற்றபட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து சுவாமிகளுக்கு அபிஷேகமும், தீபாரதனைகளும் நடந்தது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை காந்திகிராமம் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# தனுஷ்கோடி தென் கடலில் கரை ஒதுங்கிய சடலத்தால் பரபரப்பு

**ராமேஸ்வரம், ஜூன் 10-**

ராமேஸ்வரம் தனுஷ்கோடி தென் கடலோர பகுதியில் நேற்று காலையில் கடற்கரையில் சந்தேகத்தின்பில் பல மூடைகள் மற்றும் ஆண் சடலம் ஒன்று கரை ஒதுங்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதியில் அமைந்துள்ள லைட் ஹவுஸ் எதிர்புறம் உள்ள தென்பக்க கடலில் 50-க்கும் மேற்பட்ட சாக்கு மூட்டைகள் கரை ஒதுங்கியுள்ளது. இது குறித்து அப்பகுதி மீனவர்கள் தனுஷ்கோடி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன் பேரில் அங்கு வந்த போலீசர்கள் கடலில் மிதந்து வந்த மூட்டைகளை கைப்பற்றினார்கள். அதன் பின்னர் மூட்டைகளை பிரித்துப் பார்த்தபோது பிளாஸ்டிக் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூல பொருள் குவைத் நாடு, பாலீதினலி என எழுதப்பட்ட மூலப்பொருள்கள் இருந்துள்ளது.

மேலும் அதே இடத்தில் சிவப்பு கட்டம் போட்ட சட்டை அணிந்த இறந்து சுமார் ஒரு வாரம் ஆன அடையாளம் தெரியாத ஒரு ஆண் சடலம் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியுள்ளது. அதன் பின்னர் போலிசார்கள் மூட்டைகளையும் ஆண் சடளத்தையும் தனுஷ்கோடி கைப்பற்றி தனுஸ கோடி மெரைன் போலீசாரிடம் ஒப்படைத்தனர். அங்கு மெரைன் போலிசார் வழக்கு பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.

**மரம் மனிதனின் உரம்**

# விருதுநகர்: கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**விருதுநகர், ஜூன் 10-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடி மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட கலெக்டர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்மனுக்களை மாவட்ட கலெக்டர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கலெக்டர் அவர்கள் தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்கள்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கு நல வாரியத்தின் மூலம், 26 பயனாளிகளுக்கு, மகப்பேருஉதவித்தொகை, திருமண உதவித்தொகை, சாலை விபத்து மரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு, முதியோர் ஓய்வூதிய நிலுவை, கல்வித் தொகை உள்ளிட்ட ரூ.5,04000/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட நேர்முக உதவியாளர் பாத்திமா ப்ரௌதஸ், மாவட்ட நேர்முக உதவியாளர் அமர்நாத், தனித்துணை கலெக்டர் காளிமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரமேஷ், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பரமக்குடி அரசு கல்லூரியில்
# 2 மற்றும் 3-ம் கட்ட கலந்தாய்வு

**பரமக்குடி, ஜூன் 10-**

பரமக்குடி அரசு கல்லூரியில் இளநிலை பாடங்களுக்கு கடந்த 4ஆம் தேதி தேதி கலந்தாய்வு நடைபெற்ற நிலையில், இரண்டு மற்றும் மூன்றாவது கலந்தாய்வு குறித்து முதல்வர் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழக முழுவதும் உள்ள 183 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பாடத்திற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கடந்த ஜூன் 3ஆம் தேதி சிறப்பு ஒதுக்கீடு மாணவர்களுக்கான கலந்தாய்வு நடைபெற்று மாணவர் சேர்க்கை தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து கடந்த 4 ஆம் தேதி அறிவியல் பாடப் பிரிவுகளுக்கும், 5 ஆம் தேதி வணிகவியல் ( கூட்டுறு செயலான்மை ) நிர்வாக மேலாண்மை, வரலாறு, பொருளியல் பாடப்பிரிவுகளுக்கும் 6-ம் தேதி தமிழ் ஆங்கிலம் ஆகிய பிரிவுகளுக்கு பொது பிரிவினர்களுக்கான கலந்தாய்வு நடைபெற்றது.

இந்த நிலையில் பரமக்குடி அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் குமார் கூறுகையில் முதல் கட்ட கலந்தாய்வு 4ஆம் தேதி நடைபெற்ற நிலையில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக வரும் ஜூன் 11ம் தேதி இரண்டாம் கட்ட கலந்தாய்வும், வரும் 13ஆம் தேதி மூன்றாம் கட்ட கலந்தாய்வு அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நடைபெறுகிறது. ஆகையால், மாணவ மாணவிகள் கலந்தாய்வு நடைபெறும் நாட்களில், அனைத்து ஆவணங்களுடன் கல்லூரிக்கு வருகை தந்து கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீவில்லி., ஆண்டாள் கோவிலில் நடிகை கௌதமி சாமி தரிசனம்

**விருதுநகர், ஜூன் 10-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலில் சாமி தரிசனம் செய்த பின்னர் அதிமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நடிகை கௌதமி செய்தியாளர்களுக்கு அளித்தார். அப்போது பேசியதாவது:-



தமிழகம் முழுவதும் உள்ள அதிமுகவினர், அ.திமு.க. பரம்பரை வாக்காளர்களை நேரில் சென்று சந்திக்க உள்ளேன். யாருக்கு எந்த தொகுதி என முடிவு செய்ய காலம் உள்ளது. இது குறித்து எடப்பாடி பழனிச்சாமி அண்ணன் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுப்பார். தி.மு.க. ஆட்சியை வீழ்த்த வேண்டும். மீண்டும் தலையெடுத்து பார்க்கக்கூட முடியாத அளவு திமுகவுக்கு மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

உள்துறை அமைச்சர் கூட்டணி ஆட்சி என குறிப்பிட்டது குறித்த கேள்விக்கு, வார்த்தைகளின் அர்த்தம் பின்னணி குறித்து இந்த நேரத்தில் ஆராய வேண்டிய அவசியம் இல்லை. அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி முடிவான பின்னர் தேர்தலுக்கான அனைத்து பணிகளும் எடப்பாடி யார் தலைமையில் தான் நடைபெறும் என்பதில் உள்துறை அமைச்சர் அமித்ஷா மிக உறுதியாக இருக்கிறார். அதை நேற்று ஒருமுறை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலையை வரவேற்பதா போனால் போகட்டும் என பொறுத்து விட்டு விடவா என தெரியவில்லை. அதிமுக கூட்டணியில் எந்த கட்சியினைய வேண்டும் என்பதை எடப்பாடியார் சரியாக முடிவெடுப்பார். அடுத்த தேர்தலில் திமுகவை தலை நிமிர்ந்து கூட பார்க்க முடியாத அளவுக்கு முடிவு செய்தால்தான் எடப்பாடி யார் தலைமையில் நியாயமான மக்களாட்சி கொண்டு வந்து தமிழ் நாட்டை காப்பாற்ற இயலும்.என்றார்.

# டாடா மோட்டார்ஸ் அதன் டிரக் வரிசையில் குளிரூட்டப்பட்ட கேபின்களை அறிமுகப்படுத்துகிறது

**சென்னை, ஜூன் 10-**

இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், அதன் முழு டிரக் வரம்பிலும் தொழிற்சாலை பொருத்தப்பட்ட ஏர் கண்டிஷனிங் அமைப்புகளை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த குறிப்பிடத்தக்க மேம்படுத்தல் எஸ்எப்சி, எல்பிடி, அல்ட்ரா, சிக்னா மற்றும் ப்ரேமா கேபின்களை உள்ளடக்கியது, அதே நேரத்தில் முதல் கௌல் மாடல்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. டாடா மோட்டார்ஸ் செயல்திறன் மற்றும் ஓட்டும் தன்மையில் புதிய அளவுகோல்களை அமைப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையில், மின் உற்பத்தி மேம்பாடுகள் உட்பட தொடர்ச்சியான மதிப்பு கூட்டல்களையும் அறிமுகப்படுத்துகிறது.

இது குறித்து டாடா மோட்டார்ஸ் வணிக வாகனங்கள் பிரிவின் துணைத் தலைவரும் டிரக்குகள் பிரிவின் வணிகத் தலைவருமான, ராஜேஷ் கவுல் கூறுகையில், குளிரூட்டி வசதி கொண்ட கேபின்கள் மற்றும் கௌல்களை அறிமுகப்படுத்துவது ஓட்டுநர்களுக்கு வசதியான பணிச்சூழலை உருவாக்குவதற்கும், அதிக உற்பத்தித்திறனை அடைவதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குவதோடு மட்டுமல்லாமல், பல மேம்பாடுகளுடன் நீண்டகால மதிப்பை வழங்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டோம். விரிவான வாடிக்கையாளர் கருத்துகளால் வடிவமைக்கப்பட்ட இந்த மேம்படுத்தல்கள், ஸ்மார்ட் இன்ஜினியரிங் மூலம் ஆதரிக்கப்பட்டு, மொத்த உரிமைச் செலவில் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கவும், வாகன உரிமையாளர்களுக்கு அதிக லாபத்தை உறுதி செய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

# ரேயா டைமண்ட்ஸ் கோயம்புத்தூரில் புதிய ஃபிளாக்ஷிப் ஸ்டோர் திறப்பு

**கோவை, ஜூன் 10-**

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் லேப்-கிரோன் வைர நகை பிராண்ட் ரேயா டைமண்ட்ஸ், இன்று கோயம்புத்தூரில் தனது புதிய ஸ்டோரின் திறப்பை அதிகாரப்பூர்வமாக கொண்டாடியது. இந்த நிகழ்வில், கே.பி. ராமசாமி, கேபிஆர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கோயம்புத்தூர் எப்போதும் எங்களுக்கான அடுத்த சரியான அத்தியாயமாக உணரப்பட்டது என ரேயா டைமண்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பரபஞ்ச் எஸ்.கே. கோட்டா கூறினார்.

இந்த நகரம் பாரம்பரியத்தை மதிக்கிறது, ஆனால் மாற்றத்தையும் வரவேற்கிறது.அந்த உணர்வு எங்கள் தத்துவத்துடன் ஒத்துப்போகிறது.நகைகள் என்பது தனிப்பட்டது, வெளிப்படுத்தக்கூடியது மற்றும் அர்த்தமுள்ளது. அது ஒரு தனிப்பயன் நிச்சயதார்த்த மோதிரமாக இருந்தாலும், அல்லது ஒரு தினசரி கிளாசிக்காக இருந்தாலும், எங்கள் துண்டுகள் அணிபவரின் கதையுடன் வளரக்கூடியவை.நாங்கள் சிந்தனையுடன், உஷ்ணமான மற்றும் வடிவமைப்பில் முன்னோடியான ஒரு இடத்தை உருவாக்கியுள்ளோம் என்று மார்க்கெட்டிங் தலைமை அதிகாரி அஷ்வந்த் கரூர் ரமேஷ் கூறினார். கட்டிடக்கலை முதல் உரையாடல்கள் வரை, ஒவ்வொரு கூறும் மக்கள் உணர்வுகளை, தேர்வுகளை மற்றும் இன்று நகைகளை எப்படி கொண்டாடுகிறார்கள் என்பதை பிரதிபலிக்கிறது. இந்த திறப்பு வெறும் ஒரு சில்லறை மைல்கல் அல்ல.இது அர்த்தமுள்ள உறவுகளை தொடங்குவது.

# முதியவர் பைக் மோதி படுகாயம்

**நத்தம், ஜூன் 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கோபால்பட்டி- செடிப்பட்டியை சேர்ந்தவர் கூத்தன்(70).இவர் நேற்று முன்தினம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வீமாஸ் நகர் பகுதியில் பழைய பிளாஸ்டிக் பொருட்களை எடுத்து கொண்டு பஸ் ஏறுவதற்காக சாலையை கடக்க முயன்றார். அப்போது காசம்பட்டியை சேர்ந்த சந்துரு (19) என்பவர் ஒட்டி வந்த பைக் அவர் மீது மோதியது.இதில் தூக்கிவீசப்பட்டு கீழே விழுந்த முதியவருக்கு தலை,கை,கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் அவர்களை மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ்- சப் -இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# கிரிக்கெட் நட்சத்திரம் ஷுப்மன் கில் ஓக்லி அணியுடன் இணைகிறார்

**மதுரை, ஜூன் 10-**

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் ஷுப்மன் கில் தங்களுடைய அடுத்த பிராண்ட் அம்பாசிடராகவும், இந்தியாவில் எதிர்காலக் கலைப்பொருட்கள் விளம்பரத்தின் அடையாளமாகவும் இருப்பார் என ஓக்லே அறிவித்துள்ளது. உலக கிரிக்கெட்டில் மிகவும் நம்பிக்கைக்குரிய இளம் திறமைசாலிகளில் ஒருவரான ஷுப்மன் கில் மிக வேகமாக உயர்ந்து தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கியுள்ளார். விளையாட்டில் அவருடைய கன்சிஸ்டன்சி, நேர்த்தியான ஸ்ட்ரோக்பிளே மற்றும் அழுத்தமான சூழ்நிலைகளிலும் அமைதியுடன் இருப்பது ஆகிய தனித்துவமான பண்புகளால், கில் உலகெங்கிலும் உள்ள ரசிகர்களைக் கவர்ந்துள்ளார் மற்றும் அனைத்து விதமான போட்டிகளிலும் ஒரு வளர்ந்து வரும் நட்சத்திரமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவரது மகத்தான பயணம் மற்றும் சாதனைகள் இந்தியாவின் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிப்பவையாக உள்ளன. அவரின் வளர்ச்சியானது உறுதிப்பாடு மற்றும் திறமையின் சக்தியை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது.

இது குறித்து ஓக்லியின் மூத்த பிராண்ட் பிசினஸ் மேனேஜர் சாஹில் ஜண்டியல் கூறுகையில், ஓக்லி விளையாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ளது, மேலும் மிகச் சிறப்பாக விளையாடும் விளையாட்டு வீரர்களின் கலாச்சாரம் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைந்துள்ளது. மிகச் சரியாக இருப்பதிலும் தொடர்ந்து முன்னேறுவதிலும் இடைவிடாத முயற்சி செய்யும் ஷுப்மேன், ஓக்லியின் உணர்வின் சிறந்த அடையாளமாக திகழ்கிறார். கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்தை எட்டி மிகச்சிறந்தவர்களாக மாறும் வரை தொடர்ந்து குறிக்கோளை நோக்கி பயணிக்க மற்றும் குறிக்கோளை எட்டியப் பிறகும் அங்கிருந்து தொடர்ந்து பயணிக்க இந்த கூட்டாண்மை ஊக்குவிக்கும் என்று நான் நம்புகிறேன் என்று கூறினார்.



வைகாசி விசாகத்தை முன்னிட்டு மதுரை தெற்கு தொகுதிக்குட்பட்ட காமராசர் சாலையில் நடந்து சென்ற பக்தர்களுக்கு முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.சரவணன் அன்னதானம் வழங்கினார். இதில் நிர்வாகிகள் அன்னபூர்ணா தங்கராஜ், ராமமூர்த்தி, நந்தகுமார், சேகர், சண்முகம், செல்வம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



வைகாசி விசாகத்தை முன்னிட்டு மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்கத்தின் சார்பிலும், பேராக்கா நகர் பக்தகோடிகளின் சார்பாகவும் அண்ணா தொழிற்சங்க பொறுப்பாளர் மதுரை கோர்ஸ் வீ.டி.மணி ஏற்பாட்டில் பைக்காரா பகுதியில் பால்குடம் எடுத்து சென்ற பக்தர்களுக்கு அன்னதானம், நீர், மோர் வழங்கப்பட்டது. இதில் ஆன்மீக செம்மல் மாரி மகேஷ் வெங்கடேஷ், திருநகர் எஸ்.பி.ராஜேந்திரன், எம்.பி.லட்சுமணன், ஏ.பாலகிருஷ்ணன், தனக்கன்குளம் கணபதி, வட்டச்செயலாளர் பொன்முருகன், வி.சாந்தி, பசுமலை வி.குமார், வெங்கடேஷ், ராமமூர்த்தி, மாரிமுத்து, பி.ஆர்.சி.தமிழ்ச்செல்வன், வி.ஆர்.சி. முருகன், பி.ஆர்.சி.செந்தில், சிவகுமார், மூர்த்தி, ஆட்டோ ரவி, அழகரடி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வைகாசி விசாகத்தை முன்னிட்டு மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு பால்குடம் எடுத்து சென்ற பக்தர்கள்.



காஞ்சி ஸ்ரீ மகா பெரியவரின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு மதுரை அனுஷத்தின் அனுகிரகம் அமைப்பு சார்பில் 10 வயது ஞானகுழந்தை சூரிய நாராயணன் இசை நிகழ்ச்சி நடந்தது. இதில் நெல்லை ரவீந்திரன் வயலில் மதுரை நாராயணன் மிருதங்கம் நல் கிராமம் திருமுருகன் மோர்சிங் வாசித்தனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் விருட்சம் குருப் ஆப் கம்பெனியின்கிளைதிறக்கப்பட்டது. இதனைதொழிலதிபர்கள் பிரபகரன், சிவமுருகன், வீரா, ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் நிறுவன உரிமையாளர்கள் காமாட்சி, சக்திகுமார், மாரிஸ்வரன், சுடர் சண்முகவேல், மற்றும் வசந்தன், பாண்டி, தினேஷ், உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மெட்ரோ ரயில் நிலையத்தில் புத்தக பூங்கா: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

**சென்னை, ஜூன் 10-**

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் புத்தக பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்.

இது குறித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள "சென்னை புத்தகப் பூங்கா மையத்தினை திறந்து வைத்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் அதே அரங்கத்தில் நடைபெறவுள்ள விழாவில் பங்கேற்று, தமிழ்நாடு முழுவதும் கட்டப்பட்டுள்ள கூடுதல் நூலகக் கட்டடங்கள் மற்றும் 70 சிறப்பு நூலகங்களையும் காணொலி மூலம் திறந்து வைக்கவுள்ளார். இதனை முன்னிட்டு அங்கு நடைபெற்றுவரும் இறுதி கட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினோம்.

# அரசு பெண் விடுதிகளில் இனி பெண் காவலர்கள் நியமனம்

## அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 10-**

பெண்களுக்கான அரசின் அனைத்து சேவை இல்லங்களிலும் இனி பெண் காவலர்களே நியமிக்கப்படுவர் என சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

சிட்லபாக்கம் அரசு சேவை இல்லத்தில் 13 வயது சிறுமி பாலியல் தொந்தரவுக்கு ஆளானது பற்றி சென்னை திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் கல்லூரி வளாகத்தில் உள்ள சமூக நல ஆணையரகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அவர் பேசுகையில், "சமூக நலத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரக்கூடிய அரசு சேவை இல்லத்தில் சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஒருவர் ஈடுபட்டுள்ளார் என்கிற செய்தி அறிந்து நாங்கள் சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கு சென்று விசாரித்து பின்னர் அவரது தாயாரை நேரில் சென்று சந்தித்தோம். இந்த சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் உரிய புகார் அளிக்கப்பட்டு புகாரின் அதன் அடிப்படையில் தங்கும் விடுதியில் பணிபுரிந்து வரும் காவலாளியை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு கைது செய்து தற்போது சிறையில் அடைத்துள்ளார்கள்.

ஆண் காவலர்களுக்கு பதிலாக பெண் காவலர்கள் மூன்று பேர் நியமனம் செய்ய உள்ளோம். மேலும் விடுதிக்கென தனியாக சி. சி.டி.வி. கேமராக்கள் அமைப்பதற்கான பணிகளையும் மேற்கொள்ளஇருக்கிறோம். இனி வரக்கூடிய காலகட்டங்களில் தமிழகத்தில் உள்ள அரசு நிறுவனங்கள் அல்லது தொண்டு நிறுவனங்களின் மூலமாக நடத்தப்படக்கூடிய விடுதிகளில் பெண் காவலர்கள் தொடர்ந்து நியமிக்கப்படுவார்கள். இதுவரையில் 138 பிள்ளைகளிடம் விசாரணை மேற்கொண்ட நிலையில், வேற எந்த சிறுமியும் பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளாகவில்லை என தெரிய வந்துள்ளது.

சிறுவயதிலேயே திருமணம், சிறு வயதிலேயே கருத்தரித்தல் சம்பவங்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இது தொடர்பாக போதிய விழிப்புணர்வு வழங்குவதற்கு துறை ரீதியாக திட்டமிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# பைக் மோதி தொழிலாளி படுகாயம்

**நத்தம், ஜூன் 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ரெட்டியபட்டியை சேர்ந்தவர் மாரியப்பன் (48). கூலித்தொழிலாளி. இவர் தனது பைக்கில் புதுக்கோட்டை திருவிழாவிற்கு சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். வத்திபட்டி சாலையில் சென்று கொண்டிருந்த போது பின்னால் நத்தம்-காமராஜ் நகரை சேர்ந்த வெங்கடேஷ்(35) என்பவர் ஓட்டி வந்த பைக் அவர் மீது மோதியது.

இதில் தூக்கிவீசப்பட்டு கீழே விழுந்த மாரியப்பனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப் -இன்ஸ்பெக்டர் அருள்குமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# மாற்றுத்திறனாளிகள் ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு



**முதுகுளத்தூர், ஜூன் 10-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட வணிக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு இட ஒதுக்கீட்டை பின்பற்ற கோரி தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பாக ஜூலை.10 ந்தேதி முதுகுளத்தூர் பேரூராட்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பேரூராட்சி மன்ற தலைவர் ஷாஜகான் தலைமையில் சமரச கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் செயல் அலுவலர் அ.செல்வராஜ், முதுகுளத்தூர் காவல் ஆய்வாளர் செல்வராஜ், மாற்றுத்திறனாளி சங்க மாவட்டத் தலைவர் ராஜேஷ், நிர்வாகிகள் முனியசாமி, மயில்சாமி, தங்கப்பாண்டி, ராமச்சந்திரன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட குழு உறுப்பினர் வி.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். சமரச கூட்டத்தில் மாற்றுத்திறனாளிக்கான ஐந்து சதவீத இட ஒதுக்கீடு தொடர்பாக உயர்அதிகாரிகளிடம் ஆலோசனை செய்யப்பட்டு ஏலம் விடும் பொழுது நடைமுறையை பின்பற்றப்படும் எனவும், பேரூராட்சி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை ஏலம் விடும் பொழுது மாற்றுத்திறனாளி சங்கத்திற்கு முறையாக அறிவிப்பு வழங்கப்படும் கூறியதின் பேரில் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

# நத்தத்தில் தமிழர் தேசம் கட்சி பொதுக்கூட்டம்



**நத்தம், ஜூன் 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்- காந்தியார் கலையரங்கில் தமிழர்தேசம்கட்சி சார்பில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் புகழ் போற்றுதல் குறித்த பொதுக்கூட்டம் நடந்தது. இதற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் பிரபு அம்பலம் தலைமை தாங்கினார். தலைமை ஒருங்கிணைப்பாளர் வைரவேல், மாநில மாணவரணி செயலாளர் பூமி அம்பலம், வடக்கு மாவட்ட செயலாளர் ஆண்டி அம்பலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தமிழர் தேசம் கட்சி தலைவர் செல்வக்குமார் கலந்து கொண்டு பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் புகழ் குறித்து பேசினார். கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் தளவாய் ராஜேஷ், மாநில மருத்துவரணி செயலாளர் அன்புஎழில்,மாவட்ட அவைத் தலைவர் சேகர் உள்ளிட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய தமிழர் தேசம் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்



அருப்புக்கோட்டை திருநகரம் புளியம்பட்டியில் உள்ள பழனி ஆண்டவர் திருக்கோவிலில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு பக்தர்கள் விரதமிருந்து பால்குடம் எடுத்து பழனி ஆண்டவர் அபிஷேகம் செய்தனர்.

## திருமங்கலம் ரயில் நிலையத்தில்

# பிளாட்பாரம் செல்ல முடியாமல் பயணிகள் தவிப்பு: பேட்டரி கார் வசதி செய்து தந்திட கோரிக்கை

**திருமங்கலம், ஜூன் 10-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் ரயில்நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக முதலாது மற்றும் இரண்டாவது பிளாட்பாரங்களுக்கு இடையே இரும்பினாலான தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நோயுற்ற, வயதான பயணிகள் அங்குள்ள உயரமான நடை மேம்பாலத்தில் ஏறி இரண்டாவது பிளாட்பாரத்திற்கு செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருவதால் மின்தூக்கி மற்றும் பேட்டரி கார் வசதி செய்து கொடுத்திடுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருமங்கலம் ரயில் நிலையத்தில் முதலாவது பிளாட்பாரத்திலிருந்து இரண்டாவது பிளாட்பாரத்திற்கு தண்டவாளத்தை ஆபத்தான முறையில் கடந்து பயணிகள் செல்வதை தடுத்திடும் வகையில் முதலாவது பிளாட்பாரத்திற்கும் இரண்டாவது பிளாட்பாரத்திற்கும் இடையே இரும்பினாலான தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திருமங்கலம் ரயில் நிலையத்தில் தென்மார்க்கமாக சென்றிடும் ரயில்கள் அனைத்தும் இரண்டாவது பிளாட்பாரத்தில் நின்று செல்வதால் ரயில் பயணிகள் அனைவரும் 2-வது பிளாட்பாரத்திற்கு சென்றிட அதிகமான படிகளைக் கொண்ட உயரமான நடைமேம்பாலத்தில் ஏறிச் சென்றிட வேண்டிய நிலை உள்ளது.இதனால் வயதான பயணிகளும், நோயுற்றவர்களும் உயரமான நடை மேம்பாலத்தை பயன்படுத்தி இரண்டாவது பிளாட்பாரத்திற்கு சிரமத்துடன் சென்று ரயிலில் பயணிக்க வேண்டியது நிலை உள்ளது.

இதே போல் திருமங்கலம் ரயில் நிலையத்தில் பணியிலிருக்கும் பாயின்ட்ஸ் மேன்கள் ஒவ்வொரு முறை ரயில் வரும் சமயத்தில் நடைமேடையில் ஏறி இரண்டாவது பிளாட்பாரம் சென்று ரயில் போக்குவரத்திற்கு சிக்னல் கொடுத்திடும் பணிகளை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் ரயில் போக்குவரத்து அதிகமுள்ள திருமங்கலம் ரயில் நிலையத்தில் நோயுற்ற,வயதான பயணிகளும்,பாயிண்ட்ஸ் மேன்களான வேலை பார்த்திடும் பெண் பணியாளர்களும் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே திருமங்கலம் ரயில் நிலையத்தில் வயதான பயணிகள் மற்றும் பணியாளர்கள் சிரமமின்றி 2-வது பிளாட்பாரத்திற்கு செல்வதை உறுதி செய்திடும் வகையில் அமித்பாரத் திட்டத்தின் கீழ் மின்தூக்கி அல்லது பேட்டரி கார் உள்ளிட்ட ஏதாவது மாற்று ஏற்பாடுகளை தெற்கு ரயில்வே செய்து தந்திட வேண்டும் என்பதே நோயுற்ற,வயதான பயணிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# மார்ஸ் எக்ஸ் காம் இந்தியாவில் செல்லப்பிராணிகள் எவ்வாறு அமைதியாக சக்தி அளிக்கின்றன என்பதை ஆய்வு வெளிப்படுத்துகிறது

**சென்னை, ஜூன் 10-**

100+ ஆண்டு பாரம்பரியம் கொண்ட உலகளாவிய செல்லப்பிராணி பராமரிப்பு, சிற்றுண்டி மற்றும் உணவு நிறுவனமான மார்ஸ், முன்னணி மனநல நிறுவனமான காம் உடன் கூட்டு சேர்ந்து, நல்வாழ்வை மேம்படுத்த மனித-விலங்கு தொடர்புகளின் சக்திவாய்ந்த திறனை அடிக்கோடிட்டுக் காட்டும் மிகப்பெரிய உலகளாவிய கணக்கெடுப்பை வெளியிட்டுள்ளது. யூகவ் ஆல் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி,இந்தியா உட்பட 20 நாடுகளில் 30,000+ செல்லப்பிராணி பெற்றோர்களை உள்ளடக்கியது. இது குறித்து மார்ஸ் பெட்கேர் இந்தியாவின் நிர்வாக இயக்குனர் சலீல் மூர்த்தி கூறுகையில், இந்த கணக்கெடுப்பு ஒரு தீர்க்கமான தருணத்தில் வருகிறது. உலகின் பிற பகுதிகளைப் போலவே இந்தியாவும் டிஜிட்டல் சோர்வு மற்றும் வளர்ந்து வரும் மனநலச் சுமை ஆகிய இரட்டை சவால்களை எதிர்கொள்கிறது.மேலும் நாங்கள் கண்டறிந்தது நெகிழ்ச்சியானது மற்றும் அவசரமானது.

உலகளவில் கணக்கெடுக்கப்பட்ட செல்லப்பிராணி பெற்றோர்களில் 82% பேர் தங்கள் செல்லப்பிராணியுடன் பேசுவது மிகவும் நிம்மதியாக உணர உதவுகிறது என்று கூறுகிறார்கள். உலகளவில் 81% செல்லப்பிராணி பெற்றோர்கள் தங்கள் செல்லப்பிராணி தங்கள் அருகில் அமர்ந்தால் அமைதியாக உணர்கிறார்கள். இது ஒரு பகிரப்பட்ட அமைதியின் தருணம். கணக்கெடுக்கப்பட்டவர்களில் 76% பேர் தங்கள் செல்லப்பிராணி அதிகமாக சிந்திப்பதை நிறுத்த ஊக்குவிப்பதாகவும், 75% பேர் வெளியில் செல்ல அதிக வாய்ப்புள்ளதாகவும், 74% பேர் தங்கள் செல்லப்பிராணியின் செல்வாக்கின் காரணமாக சமூக ஊடகங்களில் குறைந்த நேரத்தை செலவிடுவதாகவும் கூறுகிறார்கள்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம்**
**பரமக்குடி**
**ந.க.பி 6 /2272/2025**

சாந்தி, க/பெ மயில் சூரன்
காட்டுவலசை பிரப்பன் வலசை
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது மாமனார் செல்லையா நாடார் என்பவர் கடந்த 24.02.1963 அன்று கடலாடி வட்டம், எஸ். மாரியூர் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய மாமனார் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 16.06.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

சாந்தி
மனுதாரர்

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்**
**திண்டுக்கல்.**
**ந.க.எண்.5077/2025/ஆ6**
**இ.ப.வ.எண்.286/2024/ஆ6**

சித்ராதேவி, க/பெ.பால்பாண்டி,
பாறைப்பட்டி,
சித்தர்கள் நத்தம் கிராமம்,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாடச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரர் மகள் கிரிஜா என்பவர் 03.06.2019 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

IN THE COURT OF CHIEF JUDGE
SMALL CAUSES COURT AT
CHENNAI
M.C.O.P.NO. 5258 OF 2023

1. Pothumponnu
2. Chitra
...Petitioner

-Vs-

1. Shine Hubaid
2. HDFC ERGO General Insurance Co Ltd., Chennai.
3. Ayyavu
....Respondents

TO
Ayyavu,
No.6/63 VS Nagaram
Melur Taluk
Melavalavu Madurai-625105.
3 Respondents

Take notice that the above claim petition came up on 23.04.2025 before the Hon'ble chief court Small Causes for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 17.06.2025. Ensure your presence before the said court on 17.06.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

P. MURUGESAN
Counsel for Petitioner

நீதித்துறை நடுவர்
நீதிமனறம்,திருப்பத்தூர்
DVC No.5/2024

ஸ்ரீதேவி
க/பெ.சுரேஷ்(எ)நாச்சியப்பன்
- மனுதாரர்

-எதிர்-

நாச்சியப்பன் என்ற சுரேஷ்
த/பெ.லேட்.பாலகிருஷ்ணன்
சிவலிங்கபுரம்,நாமனூர்
கிராமம்(அஞ்சல்)
மயில்ராயன் கோட்டை நாடு
சிவகங்கை வட்டம்
சிவகங்கை மாவட்டம்.
—எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்சொன்ன மனுதாரர் எதிர்மனுதாரரான தங்கள் மீது DVC Act Section 12,23(2)ன் படி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதில் எதிர்மனுதாரரான தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருப்பின் அதை நீர் எதிர்வரும் 19.06.2025-ம் தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ, வழக்கிறஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி விசயமாய் ஒருதலைபட்சமான தீர்ப்பும் தங்களுக்கு மீது பிறக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்துகிறது.

R.Amalaviji
Advocate, Karaikudi.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்**
**திண்டுக்கல்.**
**ந.க.எண்.4913/2025/ஆ6**
**பி.ப.வ.எண்.06/2025/ஆ6**

பஞ்சராஜ், த/பெ.சின்னதம்பி,
க.எண்.7/21-C, வடக்கு தெரு,
ஆவாரம் பட்டி, விளாம்பட்டி (அ)
எத்திலோடு,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாடச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரர் மகள் சுமித்ரா என்பவர் 02.06.1999 ம் தேதி ஷை முகவரியில் பிறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி பிறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்**
**திண்டுக்கல்**
**IA.No. 01/2023**
**AS.No. /2025**

தமிழ்நாடு பூமிதான போர்டு
Through மாவட்ட ஆட்சியர்
அவர்கள் திண்டுக்கல் மாவட்டம்
வகையறா
மனுதார்கள் /அப்பீல்வாதிகள்

எதிர்

ஆர்.கோபாலகிருஷ்ணன்
S/o.லேட்.ராமசாமி கவுண்டர்,
காசிபாளையம், கல்வார்பட்டி
கிராமம், வேடசந்தூர் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
5ம் எதிர்மனுதார்/
5ம் அப்பீல்பிரதிவாதி

மேற்படி நிம்பர் மனுவில் மனுதார்கள் /அப்பீல்வாதிகள் தங்கள் மீது மேல்முறையீடு மனு தாக்கல் செய்து அது 19.06.2025 ம்தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அதில் தாங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்று காலை 10.00 மணிக்கு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி தெறிவித்துக் கொள்ளளாம்.

R.K.Ravichandran M.A., B.L.,
Government Pleader
Dindigul.
Cell: 98421 69493,
9080983398

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண்: 550/2025/அ.3**

V. அய்யாவு, S/o. வீரணன்,
22, தேசிய விநாயகர் தெரு,
K.புதூர், மதுரை 625007
..... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் V.அய்யாவு என்பவரின் தாயார் இருளாயி 01.06.2016 -ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், ஆமூர் கிராமம், சொர்குழி பட்டி கிராமவீட்டில் இறந்ததை அவரது இறப்பை ஆமூர் கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

V. அய்யாவு
மனுதாரர்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண் : 3713/2025/அ.3**

A. ஆண்டிச்சாமி ,
S/o. ஆண்டிக்காளை,
3/78, மேலவளவு கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
...... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் A.ஆண்டிச்சாமி என்பவரின் தந்தை A.ஆண்டிக்காளை 25.10.1966-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலவளவு கிராமவீட்டில் இறந்ததை அவரது இறப்பை மேலவளவு கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

A. ஆண்டிச்சாமி
மனுதாரர்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண் : 3604/2025/அ.3**

மு. அரியாம் பிச்சன்,
S/o. முத்தணன்,
கண்மாய்பட்டி,
மேலவளவு கிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
...... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் மு. அரியாம் பிச்சன் என்பவரின் தந்தை V.முத்தணன் 29.12.1974-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலவளவு கிராமம், கண்மாய்பட்டி கிராமவீட்டில் இறந்ததை அவரது இறப்பை மேலவளவு கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

மு. அரியாம்பிச்சன்
மனுதாரர்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண் : 3982 /2025/அ.3**

K.சந்தன பிரபு, S/o. கருப்புச்சாமி,
328/1/B, பாண்டியன் நகர்,
மேலூர் டவுன், மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
..... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. ஆணையாளர் அவர்கள்
மேலூர் நகராட்சி
....... எதிர்மனுதாரர்

மனுதார் K. சந்தன பிரபு என்பவரின் தாத்தா சந்தனம் சேர்வை 20.02.1984-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலூர் டவுன், பாண்டியன் நகர் வீட்டில் இறந்ததை அவரது இறப்பை மேலூர் நகராட்சி அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

K. சந்தன பிரபு
மனுதாரர்

# சென்னை, பெங்களூருவில் நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டிகள் மாற்றம்

**மும்பை, ஜூன் 10-**

சென்னை, பெங்களூரு மைதானங்களில் நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டிகள் மாற்றபடுவதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

**மைதான மாற்றங்கள்...**

இந்திய ஆண்கள், மகளிர் மற்றும் ஏ கிரிக்கெட் அணிகள் உள்ளூரில் விளையாட உள்ள போட்டிகளுக்கான மைதான மாற்றங்களை பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. அதன்படி இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசி போட்டி (2-வது டெஸ்ட்) அக்டோபர் 10-ம் தேதி கொல்கத்தாவில் தொடங்க இருந்தது. ஆனால் அந்த போட்டி தற்போது புது டெல்லிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**சண்டிகருக்கு...**

அத்துடன் நவம்பர் 14-ம் தேதி டெல்லியில் தொடங்க இருந்த இந்தியா-தென் ஆப்பிரிக்கா இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கொல்கத்தாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா மகளிர் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற இருந்தது. ஆனால் இந்த 3 போட்டிகளும் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி முதல் 2 போட்டிகள் சண்டிகருக்கும், 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி புதுடெல்லிக்கும் மாற்றப்பட்டுள்ளது. மேலும் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற இருந்த இந்தியா ஏ - தென் ஆப்பிரிக்கா ஏ இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ராஜ்கோட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது.

# பயிற்சியின் போது ரிஷப் பண்ட் காயம்: இந்திய அணிக்கு சிக்கல்

**லார்ட்ஸ், ஜூன் 10-**

தொடர் ஆரம்பிப்பதற்குள் முன்னணி வீரர் காயத்தை சந்தித்திருப்பது அணிக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற 20-ம் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும், துணை கேப்டனாக ரிஷப் பண்டும் செயல்பட உள்ளனர்.

**ரிஷப் பண்ட் காயம்...**

இந்த தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி கடந்த 6-ம் தேதி இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றது. தற்போது அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் பயிற்சியின்போது முன்னணி வீரரான ரிஷப் பண்டுக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. நேற்று பேட்டிங் பயிற்சி மேற்கொள்ளும்போது இடது கையில் பந்து தாக்கியதில் காயமடைந்த அவர், வலியால் துடித்துள்ளார்.

**சிக்கல்...**

உடனடியாக அணியின் மருத்துவர்கள் ஐஸ் ஒத்தடம் கொடுத்துள்ளனர். அதன்பின் அவர் நேற்றைய பயிற்சியில் ஈடுபடவில்லை. இருப்பினும் காயத்தின் தன்மை பெரிதாக இல்லை என கூறப்படுகிறது. அணியின் மருத்துவர்கள் அவரை கண்காணித்து வருவதாகவும், முதல் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் 10 நாட்கள் இருப்பதால் அவர் அதற்கு முன் முழு உடற்தகுதியை எட்டி விடுவார் என்றும் கூறப்படுகிறது. இப்படி தொடர் ஆரம்பிப்பதற்குள் முன்னணி வீரர் காயத்தை சந்தித்திருப்பது அணிக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

## ஒருநாள் போட்டிகளை தொடர்ந்து

# டி-20 தொடரையும் வென்றது இங்கி.,

**லண்டன், ஜூன் 10-**

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுவதுமாக கைப்பற்றிய நிலையில், தற்போது டி20 தொடரையும் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

**ஒருநாள் தொடர் ...**

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நிறைவடைந்த நிலையில், இரு அணிகளும் டி20 தொடரில் விளையாடி வருகின்றன.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி பிரிஸ்டாலில் நேற்று முன்தினம் (ஜூன் 8) நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டி20 தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

**5 வெற்றிகள்...**

இங்கிலாந்து அணியின் கேப்டன் பொறுப்பிலிருந்து ஜோஸ் பட்லர் விலகிய பிறகு அணியின் புதிய கேப்டனாக ஹாரி ப்ரூக் பொறுப்பேற்றுக்கொண்டார். அவரது தலைமையிலான இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக 5 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுவதுமாக கைப்பற்றிய நிலையில், தற்போது டி20 தொடரையும் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

**ஹாரி ப்ரூக் அசத்தல்...**

ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக தோல்விகளை சந்தித்து வந்தது. இங்கிலாந்து அணி 8 போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியைத் தழுவியது. இந்த நிலையில், அணியின் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ள ஹாரி ப்ரூக் தலைமையிலான இங்கிலாந்து அணி தொடர் வெற்றிகளைப் பதிவு செய்து வருகிறது. 11 நாள்கள் இடைவெளியில் ஹாரி ப்ரூக் தலைமையிலான இங்கிலாந்து அணி இரண்டு தொடர்களை வென்று அசத்தியுள்ளது. இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று (ஜூன் 10) சௌத்தாம்டானில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பெங்களூரு சின்னசாமி மைதானத்தை அகற்ற பரிசீலனை: சித்தராமையா தகவல்

**பெங்களூரு, ஜூன் 10-**

பெங்களூரு சின்னசாமி மைதானத்தை நகரின் மையப்பகுதி யிலிருந்து அகற்ற பரிசீலிக்கப்பட்டு வருவதாக கர்நாடக முதல்வர் தெரிவித்துள்ளார்.

**ஆர்.சி.பி. சாம்பியன்...**

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சாம்பியன் கோப்பையை வென்ற ஆர்.சி.பி. அணிக்கு கடந்த 4-ந் தேதி பெங்களூரு விதானசவுதா முன்பு பாராட்டு விழாவும், சின்னசாமி ஸ்டேடியத்தில் வெற்றிக் கொண்டாட்டமும் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள ஆர்.சி.பி. ரசிகர்கள் லட்சக்கணக்கானோர் குவிந்தனர். இதனால் சின்னசாமி ஸ்டேடியத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகி இருந்தார்கள். இது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**குற்றச்சாட்டு...**

இந்த சம்பவத்திற்கு ஆர்.சி.பி. அணி நிர்வாகம், கர்நாடக கிரிக்கெட் சங்கமே காரணம் எனக்கூறி கப்பன்பார்க் போலீஸ் நிலையத்தில் 3 வழக்குகளும் பதிவாகி உள்ளது. இந்த விவகாரத்தில் தங்கள் மீது எந்த தவறும் இல்லை என்று முதல்-மந்திரி சித்தராமையா கூறி வருகிறார். ஆனால் அரசின் அலட்சியமே 11 பேர் சாவுக்கு காரணம் என்று எதிர்க்கட்சி தலைவர்கள் குற்றச்சாட்டு கூறி வருகிறார்கள்.

**காயப்படுத்தியுள்ளது...**

இந்நிலையில் பெங்களூரு சின்னசாமி மைதானத்தை நகரின் மையப்பகுதியிலிருந்து அகற்ற பரிசீலிக்கப்பட்டு வருவதாக கர்நாடக முதல் - மந்திரி சித்தராமையா தகவல் தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "இது போன்ற ஒரு விரும்பத்தகாத சம்பவம் எந்த அரசாங்கத்தின் கீழும் நடக்கக்கூடாது. தனிப்பட்ட முறையில், இந்த சம்பவம் என்னையும் அரசாங்கத்தையும் காயப்படுத்தியுள்ளது. இந்த வழக்கில் ஐந்து காவல்துறை அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். உளவுத்துறைத் தலைவரும் முதலமைச்சரின் அரசியல் செயலாளரும் மாற்றப்பட்டுள்ளனர். அத்துடன் சின்னசாமி மைதானத்தை நகரின் மையப்பகுதியிலிருந்து அகற்ற பரிசீலிக்கப்பட்டு வருகிறது" என்று கூறினார்.

# இளம் இந்திய வீரர்களுக்கு அறிவுரை

**மும்பை, ஜூன் 10-**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இளம் இந்திய அணிக்கு முன்னாள் வீரர்கள் பலரும் தங்களது அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இளம் இந்திய அணிக்கு முன்னாள் வீரர்கள் பலரும் தங்களது அறிவுரைகளை வழங்கியுள்ளனர். இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்களின் தன்மைக்கு ஏற்றவாறு இந்திய அணி உடனடியாக தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இங்கிலாந்தில் உள்ள சூழல்களில் விளையாடிய அனுபவத்தின் மூலம், பொறுமை மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பது வெற்றிக்கு மிகவும் முக்கியம் என நான் நம்புகிறேன்

இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்களின் தன்மைக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்வது மிகவும் முக்கியம். இந்திய அணி வீரர்கள் தங்களை ஆடுகளத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உடனடியாக மாற்றிக்கொள்வார்கள் என உறுதியாக கூறமுடியும். நம்மிடம் அனுபவமிக்க பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்களின் தன்மைக்கு ஏற்ப வீரர்கள் எவ்வளவு சீக்கிரம் தங்களை மாற்றிக் கொள்கிறார்களோ, அந்த அளவுக்கு அது அணிக்கு நல்லது. இந்திய அணி பல புதிய வீரர்களுடன் இங்கிலாந்தை எதிர்கொள்கிறது. ஆடுகளங்களின் தன்மைக்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டு சிறப்பாக விளையாடுவதே வெற்றி பெறுவதற்கான வழி.

## வரும் 13, 14, 15-ம் தேதிகளில்

# கோவை, நீலகிரிக்கு 'ஆரஞ்சு அலர்ட்'

**சென்னை, ஜூன் 10-**

வரும் ஜூன் 13, 14, 15 ம் தேதிகளில் கோவை மலைப் பகுதிகள், நீலகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் மிக கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால் ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இன்று (ஜூன் 10) ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது.

ஜூன் 13, 14, 15 ம் தேதிகளில் நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், திண்டுக்கல், தேனி, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட மலைப் பகுதிகள் கனமழை பெய்யு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# சத்தீஸ்கர் குண்டுவெடிப்பில் ஏ.எஸ்.பி. பலி

**ராய்ப்பூர், ஜூன் 10-**

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள கோண்டா- எரபோரா சாலையில் டோண்ட்ரா அருகே நக்சலைட்டுகள் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் சுக்மா மாவட்டத்தின் ஏ.எஸ்.பி., ஆகாஷ் ராவ் பலத்த காயமடைந்தார். பின்னர் அவர் சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார். மேலும் குண்டு வெடிப்பில் பாதுகாப்பு படையினர் சிலர் காயம் அடைந்துள்ளனர் என ஐ.ஜி., சுந்தர்ராஜ் தெரிவித்து உள்ளார். சத்தீஸ்கர் துணை முதல்வர் விஜய் சர்மா கூறியதாவது: கோண்டா-எரபோரா சாலையில் உள்ள டோண்ட்ரா அருகே குண்டு வெடிப்பில் ஏ.எஸ்.பி., ஆகாஷ் ராவ் பலத்த காயமடைந்து, தனது உயிரை தியாகம் செய்துள்ளார். அவர் ஒரு துணிச்சலானவர். அவர் பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். இது எங்களுக்கு ஒரு சோகமான தருணம். பதுங்கி இருக்கும் நக்சலைட்டுகளை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# புஜாரா குறித்து ரோகித் சர்மா

'தி டைரி ஆப் எ கிரிக்கெட்டர்'ஸ் வைப்' என்று புஜாரா மனைவி பூஜா எழுதிய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி மும்பையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ரோஹித் சர்மா பேசினார். 2023 பார்டர் கவாஸ்கர் டிராபி 3-வது டெஸ்ட் போட்டி இந்தூரில் நடைபெற்றபோது இந்திய அணி 140/7 என்று இரண்டாவது இன்னிங்ஸில் தட்டுத் தடுமாறியது. அப்போது புஜாராவும் அக்சர் படேலும் எச்சரிக்கையுடன் ஆடினர். அப்போதுதான் ரோஹித் சர்மா, நேதன் லயன் பற்றிய தன் கருத்தை இஷான் கிஷனிடம் சொல்லி களத்திற்கு அனுப்பினார். அதுவரை தடுப்பாட்டதை ஆடிய புஜாரா, ரோஹித் அனுப்பிய செய்தியினால் ஊக்கம் பெற்று லயன் பந்தை இறங்கி வந்து லாங் ஆன் மேல் சிக்ஸ் விளாசினார்.

அப்போது தான் அனுப்பிய செய்தி குறித்து ரோஹித் சர்மா பேசிய போது, "நேதன் லயன் மிட் ஆன் பீல்டரை முன்னாலேயே நிற்க வைத்து பெரும்பாலும் பந்து வீசினார். லாங் ஆன் இல்லை. இது எனக்கு ஒரு மாதிரியாக இருக்க, மிட் ஆனை முன்னால் நிறுத்தி வீசும் அளவுக்கு லயன் ஒன்றும் பெரிய பவுலர் இல்லையே என்று எனக்குத் தோன்றியது. சவாலான பிட்ச், பந்துகள் பெரிய அளவில் திரும்பின, அவர் மிட் ஆனை முன்னால் வைத்து சவால் விட்டார். எங்களுக்கும் விரைவு கதியில் ரன்கள் தேவை, உடனே இஷான் கிஷனிடம் செய்தி சொல்லி களத்திற்கு அனுப்பினேன்" என்று புஜாரா லயனை சிக்ஸ் அடித்த சம்பவம் பற்றி விவரித்தார்.

# நெய்ருக்கு கொரோனா தொற்று

உலகம் முழுவதும் மக்களை அச்சுறுத்தி வந்த கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்கி உள்ளது. இந்நிலையில் பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான நெய்மருக்கு (வயது 33) கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை சாண்டோஸ் கிளப் உறுதி செய்துள்ளது.

இதனையடுத்து உடனடியாக சக வீரர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி மருத்துவர்களின் கண்காணிப்பில் வைத்துள்ளனர். இவருக்கு கொரோனா தொற்று ஏற்படுவது இது 2-வது முறையாகும். அவருக்கு இதற்கு முன்பு கடந்த 2021-ம் ஆண்டும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

# கண்ணீர் விட்ட ரொனால்டோ

நேஷன்ஸ் லீக் கால்பந்து ஆட்டத்தில் ஸ்பெயின் அணியை வீழ்த்தி பட்டம் வென்றது போர்ச்சுகல். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் 2 - 2 கோல் கணக்கில் சமன் செய்ததால் பெனால்டி ஷூட் நடைபெற்றது. அதில் 5 கோல்களை அடித்து 5 -3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது போர்ச்சுகல். அதில் போர்ச்சுகல் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோவின் 138-ஆவது சர்வதேச கோல் ஒன்றும் அடங்கும்.

இந்த கொண்டாட்டத்தில் கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ, கால்பந்து திடலில் ஆனந்த கண்ணீர் விட்டு அழுத காட்சி பார்வையாளர்களை நெகிழச் செய்தது. இதன் மூலம் நேஷன்ஸ் லீக் கோப்பையை போர்ச்சுகல் இரண்டாவது முறையாகப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பும்ரா குறித்து கேமரூன் க்ரீன்

சமீபத்தில் ஜஸ்ப்ரீத் பும்ராவுக்கு முதுகில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பிறகு கம்பேக் கொடுத்த அவர், உலக கிரிக்கெட்டில் சில அற்புதமான சாதனைகளைப் புரிந்தார். இந்நிலையில், பும்ரா குறித்தும், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி குறித்தும் கேமரூன் க்ரீன் சில கருத்துகளை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, அது மிகவும் (பும்ரா காயத்திலிருந்து மீண்டது) சிறப்பானது. இது உங்களுக்கு நிறைய நம்பிக்கையை அளிக்கிறது. நான் அவருடன் மும்பை அணியில் விளையாடவில்லை. ஆனால், அங்கு அவருடன் சிறிது நேரம் செலவிட்டேன். அவரைப் பார்க்கும்போது, அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறார் என்பதைப் பார்த்து, எனக்கு நிறைய நம்பிக்கை கிடைத்தது.

என் பேட்டிங் மற்றும் பந்துவீச்சைப் பற்றி நன்றாக சிந்திக்க முடிந்தது. அதை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று யோசித்தேன். தோழர்கள் (சக வீரர்கள்) விளையாடுவதைப் பார்ப்பது சில நேரங்களில் கடினமாக இருந்தது. ஆனால் அதே நேரத்தில், 5-6 மாதங்கள் ஓய்வு பெறப் போகிறேன் என்பது எனக்கு தெரியும், இது எனக்கு மிகவும் தேவையாக இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# சி.எஸ்.கே. அணியில் சாம்சன்?

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். சீசனில் சஞ்சு சாம்சன் தலைமையிலான அணி 9-வது இடம் பிடித்து வெளியேறியது. முன்னதாக இந்த சீசனில் ராஜஸ்தான் அணி நிர்வாகத்திற்கும் சஞ்சு சாம்சனுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியது.

இந்நிலையில் சஞ்சு சாம்சன் தனது இன்ஸ்டாகிராம் பதிவில் தனது மனைவியுடன் சாலை ஓரம் இருக்கும் மஞ்சள் நிற கோட்டை கடக்குமாறு ஒரு புகைப்படத்தை பகிர்ந்து "நகர வேண்டிய நேரம்" என்ற தலைப்புடன் பதிவிட்டுள்ளார். இதனால் அவர் ராஜஸ்தான் அணியிலிருந்து விலகி சென்னை அணியில் இணைய உள்ளாரோ? என்று ரசிகர்களிடையே சந்தேகம் வலுத்துள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கொரியாவின் ஹன்குக் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து 29.4.2025 அன்று நடத்திய கருந்தரங்கின் ஆய்வுப் பதிப்பான "தூரக்கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா" எனும் புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக

# வரும் 12-ம் தேதி தண்ணீரை திறந்து வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்

**சென்னை, ஜூன் 10-**

தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் ஜூன் 11 மற்றும் 12ம் தேதிகளில் மேட்டூர் அணையை திறந்து வைத்து, சேலம் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்கிறார். அங்கு 50 ஆயிரம் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை (ஜூன் 11ம் தேதி) காலை 10 மணிக்கு சென்னையில் இருந்து விமான மூலமாக புறப்பட்டு 11 மணிக்கு கோவை விமான நிலையம் சென்றடைகிறார். அங்கிருந்து சாலை வழியாக ஈரோடு மாவட்டம் பெருந்துறை செல்லும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கு நடைபெறும் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

அதைத் தொடர்ந்து அங்கிருந்து மாலை சேலம் செல்லும் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் சேலம் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார். இந்த நிகழ்ச்சிகளுக்கு நடுவே தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்லும் வழி நெடுகிலும் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி முடித்து விட்டு இரவு மேட்டூர் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஜூன் 12ம் தேதி காலை 9 மணிக்கு மேட்டூர் அணையை திறந்து வைக்கிறார். அதைத்தொடர்ந்து சேலம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஒரு லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு ஜூன் 12ம் தேதி மாலை 4 மணிக்கு சேலத்திலிருந்து விமான மூலமாக புறப்பட்டு தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் சென்னை வருகிறார்.

# பா.ஜ.வின் 11 ஆண்டு கால ஆட்சி அர்ப்பணிப்புகளின் பொற்காலம்

## மத்திய அமைச்சர் அமித்ஷா பெருமிதம்

**புதுடில்லி, ஜூன் 10-**

பிரதமர் மோடி தலைமையிலான இந்த 11 ஆண்டு கால பா.ஜ., ஆட்சி பொது சேவைகளின் அர்ப்பணிப்புகளின் பொற்காலம் என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பா.ஜ., தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் 3வது ஆட்சி காலத்தின் முதலாம் ஆண்டு நேற்றுடன் நிறைவடைகிறது.

இதையொட்டி, பா.ஜ., அரசின் சாதனைகள் பட்டியலிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில், பிரதமர் மோடி தலைமையிலான இந்த 11 ஆண்டு கால பா.ஜ., ஆட்சி பொற்காலம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது;-

பிரதமர் நரேந்திர மோடியின் மூன்றாவது பதவி காலத்தில், இந்தியா சீரமைப்பு, செயல்திறன் உள்ளிட்டவற்றால், வளர்ச்சி மற்றும் சுயசார்பு பாதையில் வேகமாக முன்னேறுகிறது. பிரதமர் மோடியின் இந்த 11 ஆண்டு கால ஆட்சியானது, பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதிலும், பொது சேவைகளின் அர்ப்பணிப்புகளின் பொற்காலம் என்று சொல்லலாம்.

பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, கலாசார பெருமை மற்றும் நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றில், புதிய அத்தியாயத்தை இந்த நாடு கண்டு வருகிறது. 'குறைந்தபட்ச அரசாங்கம், அதிகபட்ச நிர்வாகம்' என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தியாவின் வளர்ச்சியின் வேகமும், அளவும் மாற்றப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் இந்த 11 ஆண்டு கால ஆட்சியில் விவசாயிகள், பெண்கள், பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரை மையமாகக் கொண்டு, ஆட்சியை நடத்தி வருகிறார், இவ்வாறு கூறியுள்ளார்.

# நாமக்கல்: மூதாட்டி கொலை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

**சென்னை, ஜூன் 10-**

நாமக்கல் மூதாட்டி கொலை சம்பவத்திற்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- நாமக்கல் மாவட்டம் சித்தம் பூண்டி கிராமத்தைச் சேர்ந்த சாமியாத்தாள் என்ற மூதாட்டி, தனது தோட்டத்து வீட்டில் மர்மக் கொள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். மறைந்த சாமியாத்தாளின் குடும்பத்தாருக்கு அதிமுக சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாமியாத்தாள் வெட்டப்பட்டு, கோவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவருக்கு ரத்தம் தேவைப் படுவதாகவும் நேற்று முன்தினம் காலை தகவல் வந்ததும், நம் அ.தி.மு.க. சார்ந்த இளைஞர்கள் அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டும், அதற்குள் சிகிச்சைப் பலனின்றி சாமியாத்தாள் உயிரிழந்துவிட்டார் என்பது மிகவும் வேதனைக்குரியது.

மாநிலத்தையே உலுக்கிய பல்லடம் மூவர் கொலை, சிவகிரி இரட்டைக் கொலை சம்பவங்களுக்குப் பிறகும் தற்போது தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில், தோட்டத்து வீடுகளில் உள்ள விவசாயிகளை குறிவைத்து நடத்தப்படும் இந்த கொலை - கொள்ளை சம்பவங்களை தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ?

பல்லடம், சிவகிரி வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் மட்டுமே இந்த குற்றங்களை செய்தவர்களா? என்ற சந்தேகம் மக்களிடையே ஏற்கனவே உள்ள நிலையில், இச்சம்பவம் அச்சந்தேகத்தை வலுப்பெறவே செய்துள்ளது. சித்தம்பூண்டி சாமியாத்தாள் கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், தொடரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை இனியேனும் முதல்வர் அடக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை பனையூரில் நடந்த நிகழ்ச்சியில் த.வெ.க. தலைவர் விஜய் முன்னிலையில் நேற்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த நிர்வாகிகளை படத்தில் காணலாம்.

# சினிமா CINI செய்திகள்

## ‘தக் லைஃப்’ திரை விமர்சனம்



கமல்ஹாசன் குழுவினர் டெல்லியில் தாதாவாக வலம் வருகிறார்கள். அவர்களுக்கு ஒரு எதிரி. இரு தரப்புக்கும் இடையிலான மோதலில் சிம்புவின் அப்பா கொல்லப்படுகிறார். சிம்புவைக் வளர்க்கிறார் கமல். ஒரு கட்டத்தில் சிம்புவின் வளர்ச்சியைக் கண்டு கமலுக்கும் மற்றவர்களுக்கும் பொறாமை வருகிறது. இந்த பொறாமை வன்மாக உறுவெடுத்து துரோகமாக வளர்ந்து நிற்கிறது. அந்த துரோகத்தினால் கமலின் சாம்ராஜ்யம் சரிந்ததா? அல்லது துரோகிகளை அவர் சாய்த்தாரா? என்பதை சொல்லும் படந்தான் தக் லைஃப்’.

ராயர் சக்திவேல் கதாபாத்திரம். தனது வசன உச்சரிப்பு மற்றும் சிறு சிறு எக்ஸ்பிரஷன்கள் மூலம் ரசிகர்களை கமல்ஹாசன் திருப்திப்படுத்த முயற்சித்திருந்தாலும், இந்த படத்தில் அவருக்கான களம் சரியாக அமையவில்லை.

கமல்ஹாசனால் வளர்க்கப்படும் சிலம்பரசனுக்கு போட்டி போட்டு நடிக்க கூடிய வாய்ப்புகள் எதுவும் அமையவில்லை. மாறாக ஆக்ஷன், திரிஷாவுடன் ஒன்சைடு ரொமான்ஸ் என்று தனது வேலையை சரியாக செய்திருக்கிறார்.

கதாநாயகர்களின் நாயகியாக நடித்திருக்கும் திரிஷா கொடுத்த வேலையை நிறைவாக செய்திருக்கிறார். அபிராமி, நாசர், ஐஸ்வர்யா லக்ஷ்மி, அசோக் செல்வன், ஜோஜு ஜார்ஜ், பகவதி பெருமாள் உள்ளிட்ட படத்தில் நடித்திருக்கும் அனைவருக்கும் சிறிய வேலை என்றாலும் அதை நிறைவாக செய்திருக்கிறார்கள். ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் “ஜிங்குஜா ஜிங்குஜா...” பாடல் மட்டுமே ஆட்டம் போட வைப்பதோடு முணுமுணுக்க வைக்கிறது. கார் சேசிங் காட்சிகள் மிரட்டலாக எடுத்த ஸ்டண்ட் இயக்குநர் பாராட்டுக்குரியவர். திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கும் மணிரத்னம், தாதாக்களின் வாழ்க்கையையும், அவர்கள் எதிர்கொள்ளும் துரோகங்களையும் மையமாக வைத்து திரைக்கதை அமைத்திருந்தாலும், அதை அழுத்தமாக சொல்ல தவறியிருப்பது மிகப்பெரிய பலவீனம். படத்தில் ரசிக்கும் படியான அம்சங்கள் என்றால் ஒளிப்பதிவும் ஆக்ஷன் காட்சிகள் மட்டுமே. மொத்தத்தில், ‘தக் லைஃப்’ மணியின் மகுடத்தில் புதிதாக வைக்கப்பட்ட ஒரு சரளிக்கல்.

## ‘பரமசிவன் பாத்திமா’ திரை விமர்சனம்



திண்டுக்கல் மாவட்டத்தில் இரண்டு மலை கிராமங்கள் உள்ளது. ஒன்று கிறிஸ்தவர்கள் வாழும் கிராமம். மற்றொன்று இந்துக்கள் வாழும் கிராமம் இந்த இரு கிராமங்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் ஏற்படுகிறது. இதில் ஒரு இளைஞர் கொல்லப்படுகிறார். இதனை விசாரிக்கும் போலீஸ் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாமல் திணறுகிறது. கடைசியில் கொலையைச் செய்தது யார்? எதற்காக கொலை நடந்தது என்பதைச் சொல்லும் படமே ‘பரமசிவன் பாத்திமா. கதையின் நாயகனாக விமல் நடிக்க அவருக்கு ஜோடியாக சாயாதேவி நடித்திருக்கிறார்.

கிறிஸ்தவ பாதரியராக எம்.எஸ்.பாஸ்கர், போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்திருக்கும் இசக்கி கார்வண்ணன் இருவரும் அதிகம் பேசிப் பேசி பார்வையாளர்களை குழப்புகிறார்கள். எழுதி இயக்கியிருக்கும் இசக்கி கார்வண்ணன், இந்து மதம் தான் உயர்ந்தது, மற்றவை பணம் கொடுத்து மக்களை தங்கள் பக்கம் இழுக்கிறது என்பதாக சொல்லியிருக்கிறார். மொத்தத்தில், எந்த மதமாக இருந்தாலும், அனைவரும் ஒன்று என்ற சிந்தனையோடு வாழ்ந்து வருபவர்களிடம் மத மோதல்களை உருவாக்க முயற்சித்திருக்கும் ஒரு தவறான படமே பரமசிவன் பாத்திமா.

## ‘திருக்குறள்’ இசை வெளியீட்டு விழா



காமராஜர் வாழ்க்கை வரலாற்றை ‘காமராஜ்’ என்ற பெயரிலும், காந்தியின் வாழ்க்கை வரலாற்றை ’வெல்கம் பேக் காந்தி’ *(Welcome Back Gandhi)* என்ற பெயரிலும் தயாரித்த ‘ரமணா கம்யூனிகேஷன்ஸ்’ நிறுவனம், தற்போது திருக்குறளை வைத்து ‘திருக்குறள்’ என்ற திரைப்படத்தைத் தயாரித்துள்ளது. இம்மாதம் 27 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருக்குறள் படத்தின் இயக்குனர் ஏ.ஜெ.பாலகிருஷ்ணன் பேசுகையில், 1330 குறளை வைத்துக்கொண்டு எப்படி படமாக எடுக்க முடியும்னு யோசித்த போது எங்களுக்கு முன்னுதாரணமா இருந்து கலைஞருடைய குரலோவியம். அந்த ஓவியங்களிலிருந்து எதையெல்லாம் காட்சிப்படுத்த முடியுமோ அவற்றைக்கொண்டு இப்படத்தை எடுத்துள்ளோம் என்றார்.

விழாவில், விசிக தலைவர் தொல். திருமாவளவன் பேசுகையில், 18 கீழ்க்கணக்கு நூல்களிலே, திருக்குறள் மட்டும்தான் உலகளாவிய நூற்றுக்கணக்கான மொழிகளில், மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது மனித குலத்துக்கே பொதுவான நூல் உலக பொதுமறை அப்படித்தான் திருக்குறளை நாம் முன்னிறுத்த வேண்டியது இருக்கிறது எனாறர். இப்படத்தில் வள்ளுவராக கலைச்சோழன், வாசுகியாக தனலட்சுமி, பாண்டிய மன்னனாக ஓ.ஏ.கே.சுந்தர், நக்கீரராக இயக்குநர் சுப்ரமணிய சிவா, புலவர் பெருந்தலைச்சாத்தனாக கொட்டாச்சி ஆகியோரோடு, குணாபாபு, பாடினி குமார் மற்றும் பலர் நடித்துள்ளனர். இசைஞானி இளையராஜா பாடல்கள் எழுதி, இசையமைத்துள்ளார். தயாரிப்பு நிர்வாகம் - எஸ்.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ்.

## ‘பேரன்பும் பெருங்கோபமும்’ - திரை விமர்சனம்



தேனி மாவட்டத்தில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையில் ஆண் செவிலியராக பணியாற்றும் நாயகன் விஜித் பச்சான், குழந்தை கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரிக்கும் பல அதிர்ச்சிகரமான தகவல்களை தெரிவிக்கிறார். அவை என்னனென்ன என்ற கேள்விகளுக்கான விடையை பல திருப்பங்களோடு சொல்வதே ‘பேரன்பும் பெருங்கோபமும் படம். நாயகனாக நடித்திருக்கும் விஜித் பச்சான், கல்லூரி மாணவர், இளைஞர், வயதானவர் என மூன்று தோற்றங்களில் நடித்து கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்த்திருக்கிறார். நாயகி ஷாலி நிவெகஸ், பல எக்ஸ்பிரஷன்களை வெளிப்படுத்தி கவனம் ஈர்க்கிறார்.

வில்லன்களாக நடித்திருக்கும் மைம் கோபி, அருள் தாஸ் இருவரும் அருமையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இளையராஜா இசையில் பாடல்கள் ஓகே ரகமே.. எழுதி இயக்கியிருக்கும் சிவபிரகாஷ், சாதி ரீதியிலான ஏற்றத்தாழ்வு என்பது ஒருவரது பிறப்பினால் வருவதில்லை, வளர்ப்பினால் மட்டுமே வருகிறது, என்ற கருத்தை சொல்லி இருப்பதற்காக அவரைப் பாராட்டலாம். ஆனாலும் எந்த புதுமையும் இல்லாமல் வழக்கமான கதை சொல்லல் என்பதால் மக்கள் மத்தியில் இப்படம் எடுபடவில்லை.

## ‘ஜின்’ திரை விமர்சனம்



மன்னர்கள் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக அவர்களுக்கு மந்திரவாதிகள் மூலம் கொடுக்கப்பட்ட சக்தி தான் ஜின். இதில், நல்ல ஜின்களும் உண்டு. கெட்டவைகளும் உண்டு. இப்படிப்பட்ட ஜின்கள் தற்போதைய காலக்கட்டத்தில் ஒருவரிடம் இருந்தால், என்னவெல்லாம் நடக்கும் என்பது தான் கதை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் ஒருவரிடம் இருந்த ஒரு நல்ல ஜின் நாயகன் முகேன் ராவ் வசம் வருகிறது. அது வந்த பிறகு, காதல், கல்யாணம், என வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லகிறது. அதே சமயம், அவரது மனைவி சில பிரச்சனைகள் காரணமாக உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்.

இந்நிலையில் ஜின் பற்றிய ரகசியம் ஒன்று முகேனுக்கு தெரிய வருகிறது. அது என்ன?, அதற்கும் தன் மனைவிக்கும் ம் என்ன சம்மந்தம்?, என்பதை சொல்வது தான் ‘ஜின்’. நாயகன் முகேன் ராவ் சிரித்து சிரித்து நடித்திருக்கிறார். நாயகி பவ்யா ட்ரிகா, சில காட்சிகளில் வந்துவிட்டு கோமாவில் படுத்து விடுகிறார். இசையமைப்பாளர்கள் விவேக் மெர்வின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் சுமார் ரகம். எழுதி இயக்கியிருக்கும் டி.ஆர்.பாலா, ஜின் கிராபிக்ஸ் கதாபாத்திரத்தை மையமாக கொண்டு கதை நகர்த்தப்படுவது சிறுவர்களை கவரும் முயற்சியாக இருந்தாலும், தரமற்ற கிராபிக்ஸ் கதாபாத்திரம் மற்றும் அதன் செயல்பாடுகள் கதையோடு ஒட்டாமல் பயணிப்பது படத்திற்கு பலவீனமாக உள்ளது.

## 9 ஆண்டுகளுக்கு பிறகு நடந்தது: ஒட்டன்சத்திரம் அருகே எருது விடும் விழா



**ஒட்டன்சத்திரம், ஜூன் 10-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அடுத்துள்ள லெக்கையன்கோட்டையில் மாதவகுல நாலுகம்பம் தாத்தைய சுவாமி திருக்கோயில் கொழுக்கட்டைத் தம்பிரான் கும்பிடு பெருவிழா நடைபெற்றது.

முதல் நாள் இரவு விலக கூடைகள் பெட்டனானி பெருமாள் கோவிலில் இருந்து சலுகை மாடுகள் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனை தொடர்ந்து தேவராட்டம், சேவையாட்டம், கும்மியாட்டம் நடைபெற்றது. இரண்டாவது நாள் கொத்து கொம்பு நடுதல் பொது அமைத்தல் விருதுகள் சேவை எடுத்தல் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 9 ஆண்டுகளுக்குப் பிறகு எருது விடும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் திண்டுக்கல், தேனி, கரூர், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 46 கிராமங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து எருது விடும் நிகழ்ச்சியை கண்டு களித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை செல்லச்சாமி, சுருளி மணி, ராஜகோபால், விநாயகம், நாகராஜ், வரதராஜ் உள்ளிட்ட நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## திருமங்கலத்தில் ஸ்ரீபத்ரகாளி மாரியம்மன் கோவில் வைகாசி திருவிழா

**திருமங்கலம், ஜூன் 10-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஸ்ரீபத்ரகாளி மாரியம்மன் திருக்கோவில் வைகாசி திருவிழாவின் முக்கிய நிகழச்சியாக நாடு வளம் பெற்றிட வேண்டி நடைபெற்ற மாபெரும் முளைப்பாரி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

திருமங்கலம் பாண்டிய குல சத்திரிய நாடார்கள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீபத்ர காளி மாரியம்மன் திருக்கோவிலில் வைகாசி திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது.

புகழ்பெற்ற இந்த வைகாசி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக நாடு வளம் பெற்று திகழ்ந்திட வேண்டியும், நாட்டு மக்கள் நலம் பெற்று வாழ்ந்திட வேண்டியும் முளைப்பாரி ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

இதற்காக விரதம் இருந்த உறவின்முறையார் தங்களது வீடுகளின் இருட்டறையில் மிகவும் நேர்த்தியுடன் முளைப்பாரி வளர்த்து வந்தனர். பின்னர் இதனை திருவிழாவின் 9ம் நாள் திருவிழாவான நேற்று மாலை ஸ்ரீபத்ர காளி மாரியம்மன் கோவிலின் வளாகத்திற்கு கொண்டு வந்து வைத்து அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் செய்து வழிபாடு நடைபெற்றது. பின்னர் அதிர்வெடிகள் மற்றும் மேளதாளங்கள் முழங்கிட முளைப்பாரி ஊர்வலம் கோவிலில் இருந்து புறப்பட்டது.

நகரின் முக்கிய வீதிகளான பெரியகடைவீதி, உசிலை சாலை வழியே மேளதாளங்கள் முழங்கிட சென்ற முளைப்பாரி ஊர்வலத்தில் பெண்கள், குழந்தைகள் முளைப்பாரி சுமந்தும் குலவையிட்டபடியும் சென்றனர்.

கொட்டும் மழையினை பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். இந்த முளைப்பாரி ஊர்வலம் திருமங்கலம் நகரின் மேற்கு பகுதியிலுள்ள குண்டாற்று பகுதியில் நிறைவடைந்து முளைப்பாரி அனைத்தும் குண்டாற்றில் கரைக்கப்பட்டது.

இதனால் நாடு செழித்து நாட்டு மக்கள் அனைவரும் நலம் பெற்று திகழந்திடுவர் என்பது முளைப்பாரி ஊர்வலத்தின் ஐதீகமாகும். இதற்கான ஏற்பாடுகளை திருமங்கலம் பாண்டியகுல சத்திரிய நாடார்கள் உறவின்முறையினர் செய்திருந்தனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## கொட்டாம்பட்டியில் கலைஞரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்
### அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்



**மேலூர், ஜூன் 10-**

தி.மு.க. முன்னாள் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான கலைஞரின் 102-வது பிறந்தநாளை முன்னிட்டு கொட்டாம்பட்டியில் உள்ள கச்சிராயன்பட்டி ஊராட்சி, கம்பூர் ஊராட்சி, வஞ்சிநகரம் ஊராட்சி ஆகிய கிராமங்களில் தி.மு.க. சார்பில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் தியாகராஜன் , கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜராஜன், கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி, கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், நாவினிபட்டி வேலாயுதம், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மற்றும் பாலகிருஷ்ணன், தற்காகுடி சரவணன், குமரேசன், துரை புகழேந்தி, கண்ணன், ஆடுதுறை, இளஞ்செழியன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கம்பூர் கதிரேசன், கேசம்பட்டி ஜோதிலட்சுமி ராஜா, சேக்கிப்பட்டி பிரியா பிரபு, கொட்டாம்பட்டி பால சுப்பிரமணியன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



**வைகாசி விசாகத்தை முன்னிட்டு அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் பைக்காரா பகுதியில் பால்குடம் எடுத்து சென்ற பக்தர்களுக்கு அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணைச்செயலாளரும், நடிகையுமான கௌதமி அன்னதானம் வழங்கினார். இதில் நிர்வாகிகள் டாக்டர் விஜயபாண்டியன், முனிச்சாலை சரவணன், பைக்காரா செழியன், ராமசுப்பு, ராமமூர்த்தி, நேருநகர் கணேன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

## தனுஷ்கோடிக்கு இலங்கை அகதிகள் வருகை



**ராமேஸ்வரம், ஜூன் 10-**

தனுஷ்கோடி கடலோர பகுதியில் நேற்று அதிகாலையில் இலங்கையிலிருந்து கள்ளபடகு மூலம் வருகை தந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு வயது சிறுமிகள் ஐந்து அகதிகளிடம் போலிசார்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி கடலோர பகுதியில் இலங்கை அகதி வந்திருப்பதாக தனுஷ்கோடி மெரைன் போலீசார் சார்களுக்கு மீனவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன் பேரில் அங்கு வந்த போலீசார்கள் அப்பகுதியில் பணி தெரியாமல் நின்று கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் உட்பட ஐந்து அகதிகளை பிடித்து விசாரணை நடத்தினார்கள்.விசாரணையில் இலங்கை கண்டி மாவட்டம் பகுதியை சேர்ந்த முகமது கியாஸ்( 43) ,இவரது மனைவி பாத்திமா ஃபர்ஹானா ( 34) மகன் முகமது யாஹ்யா( 12), மகள்கள் அலிஷா (4)அமிரா (4) என தெரிய வந்தது.மேலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதர நெருக்கடியால் தங்களது பிழைக்க முடியவில்லை என்பதால் இந்தியாவிற்கு சென்று எப்படி வேண்டுமானாலும் பிழைத்து விடலாம் என நம்பி ஞாயிற்றுக்கிழமை இரவு கண்டி கடலோரப் பகுதியில் இருந்து இலங்கை படகில் கள்ள தனமாக தனுஷ்கோடி கடலோர பகுதிக்கு வந்ததாக தெரிவித்துள்ளனர் அதன் பின்னர் போலீசார்கள் மண்டபம் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று உயர் அதிகாரிகளின் விசாரணை பின்பு சிறுமிகள் உள்பட ஐந்து பேரையும் மண்டபம் அகதி முகாமில் தங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## பணிமனைகளில் மருத்துவ முகாம்கள் நடத்த போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் கோரிக்கை

**திருமங்கலம், ஜூன் 10-**

பணியின் போது தொடரும் உயிரிழப்புகளால் பணிமனைகளில் மாதம் தோறும் மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களில் அரசுப் பேருந்துகளை இயக்கிச் சென்றிடும் போது ஓட்டுனர் மற்றும் நடத்துனர் மரணமடைந்திடும் நிகழ்வுகள் வாடிக்கையான ஒன்றாகி விட்டது.

இது போன்ற நிகழ்வுகளில் பேருந்து விபத்தில் சிக்கியது பயணிகள் காயம் அல்லது விபத்தினை தவிர்த்ததால் பயணிகள் உயிர் தப்பினர் என செய்திகள் வெளிவருவது அன்றாட நிகழ்வாகி விட்டது.

இதற்கு பணிச்சுமை ஒரு புறம் இருப்பினும், போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களது உடல் நலனில் போதிய அக்கறை செலுத்தாதது முக்கிய காரணமாகும். கால அவகாசம் கிடைத்தால் ஓய்வெடுக்கச் சென்றிடும் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர்களும் நடத்துனர்களும் தங்களது உடல் சார்ந்த பிரச்சனைகளை கண்டு கொள்வது கிடையாது.இதன் காரணமாக பல்வேறு உடல் உபாதைகளுடன் பேருந்தினை இயக்கிச் செல்வதே பணியின் போது ஏற்படும் உயிரிழப்புகளுக்கு மூலகாரணமாக அமைந்து விடுகிறது.

இந்நிலையில் அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றிடும் ஓட்டுனர், நடத்துனர் மற்றும் தொழிலாளர்களின் உடல் நலனை பாதுகாத்திடும் வகையில் தமிழகத்திலுள்ள பணிமனைகளில் மாதம் தோறும் அரசின் சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என போக்குவரத்து தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறாக செய்வதன் மூலம் போக்குவரத்து தொழிலாளர்களின் உடல் உபாதைகள்,நோய் பிரச்சனைகள் கண்டறிப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுவதுடன் தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கிடவும் இதன் மூலம் வசதி கிடைப்பதாக கூறிடும் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் இந்த முகாம்களை ஈ.எஸ்.ஐ. அல்லது அரசு மருத்துவர்களை கொண்டு உரிய முறையில் நடத்திடலாம் என்று கருத்து தெரிவித்தனர்.எனவே பணியின் போது தொடர்ந்திடும் உயிரிழப்பு விவகாரங்களை அரசு விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் தமிழகத்திலுள்ள அனைத்து பணிமனைகளிலும் மாதம் தோறும் மருத்துவ முகாம்களை நடத்திட வேண்டும் என்பதே அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## வைகாசி விசாகத் திருவிழா கோலாகலம்:

# திருச்செந்தூரில் லட்சக்கணக்கானோர் சாமி தரிசனம்

**தூத்துக்குடி, ஜூன் 10-**

திருச்செந்தூரில் வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு லட்சக்கணக்காண பக்தர்கள் கடலில் புனித நீராடி, சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

தமிழ் கடவுள் முருகப்பெருமானின் ஜென்ம நட்சத்திரமான வைகாசி விசாக நட்சத்திர தினம், வைகாசி விசாக பெருந்திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான வைகாசி விசாகத் திருவிழா நேற்று (ஜூன் 9) நடைபெறுகிறது.

இதனை முன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இன்று அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், அதனைத் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றன.

மாலை 4 மணிக்கு மூலவருக்கு சாயரட்சை தீபாராதனை ஆனதும், சுவாமி ஜெயந்திநாதர் தங்க சப்பரத்தில் எழுந்தருளி வசந்த மண்டபம் வந்தார். அங்கு முனிகுமார்களுக்கு சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 7.15 மணிக்கு ராக்கால அபிஷேகம் நடைபெற்றது.

விசாகத் திருவிழாவை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூரில் குவிந்துள்ளனர். அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிகிணற்றில் புனித நீராடி, நீண்டவரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். மேலும் ஏராளமானோர் பாதயாத்திரையாக வந்தும், அலகு குத்தியும், புஷ்ப காவடி, இளநீர் காவடி, பால்குடம் எடுத்தும் நேர்த்திக் கடன் செலுத்தி வருகின்றனர்.

## தமிழ்நாடு மாநில திட்டக்குழு....

(1-ம் பக்க தொடர்ச்சி)

மற்றும் செயல் திட்டங்களையும் கொண்டுள்ளது.

இந்த அறிக்கை தமிழகத்தின் வாகன உற்பத்தி துறையின் அடுத்த கட்ட வளர்ச்சியை விவரிக்கிறது. வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, கால நிலைக்கு ஏற்ப மற்றும் நிலைத்த தன்மையுடன் கூடிய வலுவான அடித்தளத்தை உருவாக்க உள்ளது என்று இவ்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் நிலைத்த வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு உற்பத்தித் துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்க இவ்வறிக்கை பரிந்துரைக்கிறது. குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையை வலுப்படுத்தல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை ஆகியவையும் முக்கிய அம்சங்களாக இடம் பெற்றுள்ளன. இவ்வறிக்கை, அனைவருக்கும் பயனளிக்கும் ஒருங்கிணைந்த மற்றும் செம்மையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி, சமூக நீதி மற்றும் அறிவுசார் பரிணாமத்தை ஒருங்கிணைக்கும் விரிவான செயல்திட்டமாக இவ்வறிக்கை அமைந்துள்ளது.




ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி
கிருஷ்ணகிரி மாவட்டம்



ஊத்தங்கரை தேர்வு நிலை பேரூராட்சி 2024-2025 பணிகள் விவரம்

| வ.எண் | பேரூராட்சியின் பெயர் | திட்டம் | பணிகள் விவரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சவார்டு எண்.1 வண்டிக்காரன்கொட்டாயில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதியதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி செய்தல். | 15.00 |
| 2 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குச் சொந்தமான உரத்திடலில் (RR PARK ) சுற்றுச்சுவர் கட்டும் பணி | 10.75 |
| 3 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (அன் டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 14 காமராஜ் நகரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 10.00 |
| 4 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (அன் டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 14 காமராஜ் நகரில் புதியதாக வடிகால் அமைத்தல் | 10.00 |
| 5 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 அம்பேத்கர் நகரில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல் . வார்டு எண் 3 கவர்னர் தோப்பு. வார்டு எண் 7 பழைய கடை வீதி வார்டு 13 இந்திரா நகர் மற்றும் வார்டு 12 கலைஞர் நகர் ஆகிய இடங்களில் குடிநீர் குழாய் பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்தல | 15.00 |
| 6 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (டைய்டு) 2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 காமராஜ் நகர் மேற்கு அன்பு வீடு முதல் கோபால் வீடு வரை . துரை வீடு முதல் பிரகாஷ் வீடு வரை கழிவு நீர் கால்வாய் அமைத்தல் | 10.60 |
| 7 | ஊத்தங்கரை | 15 வது நிதிக்குழு மான்யம் (அன் டைய்டு) 2024–2025 | வார்டு எண் 3 கவர்னர் தோப்பில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 15.00 |
| 8 | ஊத்தங்கரை | பள்ளி மேம்பாட்டு மான்யம். ஆறாவது நிதிக்குழு மானியம் 2024–25 | ஊத்தங்கரை அரசுபெண்கள் மேல்நிலைப்பள்ளியில் (10 வகுப்பறைகள்) கொண்ட கட்டிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | 32.40 |
| 9 | ஊத்தங்கரை | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்–2024–2025 | ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி இந்திரா நகரில் பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் | 10.00 |
| 10 | ஊத்தங்கரை | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்–2024–2025 | ஊத்தங்கரை பேரூராட்சியில் கண்ணாலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புதியதாக சுற்றுசுவர் கட்டும் பணி செய்தல் | 10.00 |
| 11 | ஊத்தங்கரை | ஊரகவளர்ச்சி வட்டார வளர்ச்சி திட்டம் 2024–25 | பாரதிபுரம் முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு சொந்த கட்டிடம் கட்டுதல் | 16.25 |

திரு.ச.தினேஷ்குமார் இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்
திரு. செ.கணேஷ்
உதவி இயக்குநர் பேரூராட்சிகள்
தருமபுரி மண்டலம்
திரு. செ.ரவிசங்கர்
செயல் அலுவலர்
ஊத்தங்கரை
திருமதி. கலைமகள் தீபக்
பேரூராட்சி துணை தலைவர்
வார்டு கவுன்சிலர்கள்
த.சுமித்ரா, கா.கனகேஷ்வரி, ம.மோகன், க.கதிர்வேல்
மா.சிவன், ச.அபிபுனிசா, வி.கல்பனா, மா.ஷாகிதாபேகம்
க.நிர்மலா, ம.மணிமேகலை, கு.கவிதா, கு.ஸ்ரீராமன், ச.குமரேசன்



திரு. பா.அமானுல்லா
பேரூராட்சி தலைவர்

பருகூர் தேர்வுநிலை பேரூராட்சி
கிருஷ்ணகிரி மாவட்டம்




கிருஷ்ணகிரி மாவட்டம் - பருகூர் தேர்வு நிலை பேரூராட்சி 2024-2025

| வ. எண் | திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | அரசு பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்துதல் (ஆறாவது நிதிக்குழு மானியம்) |
| 2. | அரசு மருத்துவமனை அடுக்கு மாடி கட்டிடம் அமைத்தல். |
| 3. | அனைவருக்கும் குடிநீர் வழங்கும் திட்டம். |
| 4. | சந்தை மேம்பாட்டு திட்டம். |
| 5. | எரிவாயு தகன மேடை திட்டம். |
| 6. | பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம். |
| 7. | சாலைகள் – தெருவிளக்குகள் அமைக்கும் திட்டம். |

திரு.ச.தினேஷ்குமார் இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்
திரு.தே.மதியழகன் B.Sc.,DF.,Tech.
பருகூர் சட்ட மன்ற உறுப்பினர்
திரு. செ.கணேஷ்
உதவி இயக்குநர் பேரூராட்சிகள்
தருமபுரி மண்டலம்
திரு.எம். விஜயன்
செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி
பருகூர்
திருமதி.லட்சுமி மனோகரன்
தேர்வு நிலை பேரூராட்சி துணை தலைவர்
பருகூர்



திரு.ச.சந்தோஷ்குமார் B.E.,
தேர்வு நிலை பேரூராட்சி தலைவர்
பருகூர்

காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி
கிருஷ்ணகிரி மாவட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம் - காவேரிப்பட்டிணம் தேர்வு நிலை பேரூராட்சி

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பள்ளி மேம்பாட்டுத் திட்டம் -2024-2025 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை(3X2) கட்டுதல் | 119.00 |
| 2 | நமக்குநாமே திட்டம் 2024-2025 | வார்டு எண் 7 பன்னீர் செல்வம் தெரு பிள்ளையார் கோவில் முதல் வேணு வெல்டிங் வரை கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | 6.00 |
| 3 | இயக்கம் மற்றும் பராமரிப்பு | வாரச்சந்தையில் உள்ள ஆடு அடிக்கும் தொட்டி மேம்பாடு பணி செய்த | 24.00 |
| 4 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | வார்டு எண் 10 ஜின்னா தெரு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி முதல் பேருந்துநிலையம் வரை கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | 114.00 |
| 5 | இயக்கம் மற்றும் பராமரிப்பு | காவேரிப்பட்டிணம் பேரூராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையினை மேம்பாடு செய்தல். | 30.00 |
| 6 | 15வது நிதிக்குழு மானியம் முதல் தவனை | வார்டு எண் 1,3,7,11,6,9 பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 6.00 |
| 7 | 15வது நிதிக்குழு மானியம் முதல் தவனை | வார்டு எண் 7 பன்னீர் செல்வம் தெரு தங்கமணி வீடு முதல் பாஸ்கர் ஆசிரியர் வீடு வரை கழிவு நீர் கால்வாய் அமைத்தல். | 6.00 |
| 8 | 15வது நிதிக்குழு மானியம் இரண்டாம் தவனை | வார்டு எண் 5 அம்பேத்கார் தெருவில் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | 5.00 |
| | | மொத்தம் | 310.00 |

திரு.ச.தினேஷ்குமார் இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்
திரு. செ.கணேஷ்
உதவி இயக்குநர் பேரூராட்சிகள்
தருமபுரி மண்டலம்
திருமதி.ச. ராணி
செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி
காவேரிப்பட்டிணம்
திருமதி.செ.அம்சவேணி
தேர்வு நிலை பேரூராட்சி தலைவர்
காவேரிப்பட்டிணம்